# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4 தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2051 தை / ஜனவரி 2020 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be

## தேசத்தின் குரல்

**ஆளுநரிடம் நாம் கேட்க வேண்டியது: உடனே எழுவர் விடுதலை!**

**அல்லது அவரது பதவி விலகல்!**

பேரறிவாளன் ,சாந்தன் ,முருகன் ,நளினி ,இரவிச்சந்திரன் ,இராபர்ட் பயஸ் ,ஜெயக்குமார் ஆகிய தமிழர் எழுவர் விடுதலைக்காகத் தமிழகம் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது .அவர்களின் விடுதலைக்காக உச்ச நீதிமன்றம் வரை சென்று பெற வேண்டிய தீர்ப்பனைத்தும் பெற்றாகி விட்டது .

அரசமைப்புச் சட்டம் உறுப்பு161 இன் படி இந்த எழுவரையும் விடுதலை செய்வது குறித்து ஆளுநர் உரியவாறு முடிவெடுக்கலாம் என்று உச்ச நீதிமன்றம்) நீதியர் இரஞ்சன் கோகோய் தலைமையிலான ஆயம் 2018 (செப்டெம்பர்6 ஆம் நாள் தீர்ப்பளித்து விட்டது .உறுப்பு161 இன் படி ஆளுநருக்குள்ள அதிகாரம் என்பது மாநில அரசுக்குள்ள அதிகாரம்தான் ,மாநில அரசின் முடிவைத்தான் ஆளுநர் ஏற்று ஆணையிட வேண்டும் என்பது சட்டத்தில் திட்டவட்டமாகத் தீர்ந்து போன செய்தி . 1980ஆம் ஆண்டின் மாருராம் தீர்ப்பு உள்ளிட்ட பல வழக்குகளில் இந்திய உச்ச நீதிமன்றம் இதைத் தெளிவாக்கி விட்டது .

இந்த அடிப்படையில்தான் 2018 செப்டம்பர்9 ஆம் நாள் தமிழக அமைச்சரவை கூடி இந்த எழுவரையும் விடுதலை செய்ய முடிவெடுத்து ஆளுநருக்கு அறியத்தந்தது .இந்த முடிவை ஏற்று

## உள்ளே...

1. தேசத்தின் குரல் -1
2. காசுமீரம் யாருக்கு -5
3. சூழல் அரண் அறிக்கை- 6
4. நெருங்கும் பெருமந்தம்- 8
5. காலநிலை மாற்றத்தில் அல்பீடோ விளைவு- 14
6. நகர் வெப்பத்தீவு விளைவு-16
7. சுலைமானிக்கு வணக்கம்-20
8. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில்(3) -27

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

எழுவர் விடுதலைக்கு ஆணையிடுவது ஆளுநரின் சட்டக் கடமை .தவிர்க்கவோ தட்டிக் கழிக்கவோ முடியாத கடமை .காரணமே சொல்லாமல் தள்ளிப்போடவும் முடியாத கடமை .

எழுவர் விடுதலைக்கு எதிராகக் கடைசியாகத் தொடரப்பட்ட வழக்கை 2019 மே9 ஆம் நாள் தீர்வு செய்யும் போதும் நீதியர் ரஞ்சன் கோகோய்" nothing survives in this case" என்று சொல்லிப் பழைய தீர்ப்பையே உறுதி செய்தார் .இத்தனைக்குப் பிறகும் ஆளுநர் அசைய மறுக்கிறார் .அவர் இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்திடம் கருத்துக் கேட்டிருப்பதாகச் செய்தி வந்த போது ஆளுநர் அலுவலகமே அதை மறுத்து விட்டது .சட்ட வல்லுநர்களைக் கலந்தாய்வு செய்வதாகச் சொல்லப்படுமானால் எவ்வளவு காலம் ?எந்தச் சிக்கல் குறித்து ?என்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் .

குடியாட்சிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவை -- அதிலும் 28 ஆண்டுகளாகச் சிறைப்பட்டிருப்பவர்களின் விடுதலை தொடர்பாக அரசமைப்புச் சட்டப்படியும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் படியும் எடுத்த முடிவை -- ஏற்காமல் ,எந்த விடையும் சொல்லாமல் காலவரையின்றி கிடப்பில் போடுவது சட்டத்தின் ஆட்சியையே கேலிக்கூத்தாக்குவதாகும் . ஆளுநர் அரச மாளிகையின் தந்தக் கோபுரத்திலிருந்து இறங்கி வரட்டும் .தமிழகத்தின் வினாக்களுக்கு விடை சொல்லட்டும் .அமைச்சரவை முடிவை ஏற்பதில் ஏன் இத்தனைக் காலத்தாழ்வு என்பதற்கு வெளிப்படையாக விளக்கமளிக்கட்டும் .ஏற்க முடியாது என்றால் அதற்குக் காரணம் சொல்லட்டும் .காலந்தாழ்த்துவது ஆளுநர் உரிமை என்று வாதிடுவது குடியாட்சியத்தையே இழிவுபடுத்துவதாகும் .முடியாட்சி செய்யும் மன்னர் கூட இப்படிச் சொல்ல மாட்டார் .உறுப்பு72 இல் குடியரசுத்தலைவரோ உறுப்பு161 இல் ஆளுநரோ காலந்தாழ்த்த உரிமை இல்லை என்பதை உச்ச நீதிமன்றம் தெளிவாக்கி விட்டது .காலந்தாழ்ந்த நீதி மறுக்கப்பட்ட நீதியே] Justice delayed is justice denied] என்ற கொள்கை ஆளுநருக்கும் பொருந்தும் .அளவுமீறியதும் காரண விளக்கமற்றதுமான காலத்தாழ்வு) inordinate and unexplained delay) அரசமைப்புச் சட்டத்தின் 21ஆம் உறுப்பின் படியான" right to life and personal liberty" வாழ்வுரிமையையும் ஆள்வகைத் தன்னுரிமையையும் மீறுவதாகும் ,அளவுமீறியதும் காரண விளக்கமற்றதுமான காலத்தாழ்வு அரசமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானது [Inordinate and unexplained delay is unconstitutional] என்பதை இதே வழக்கில் கொலைத் தண்டனையைக் குறைத்துத் தீர்ப்பளித்த போது உச்ச நீதிமன்றம் தெளிவாக்கி விட்டது .

ஆனால் ஆளுநரின் காலவரையற்ற இழுத்தடிப்பு நீதியைச் சாகடிக்கும் மௌனக் கொலை

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

என்பதை இடித்துரைக்காமல் நீதிமன்றங்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்வது வெட்கக்கேடு !ஆளுநர் பதவி உயர்ந்த பதவி என்பதெல்லாம் ஒரு காரணமாக இருக்க முடியாது . மாந்தவுரிமைகளைக் காட்டிலும் எந்தப் பதவியும் உயர்வானதன்று .உயர்வான பதவியில் இருப்பவர்கள் இழிவான தந்திரங்கள் செய்யாதவர்களாகவும் இருக்க வேண்டும் .சுருங்கச் சொல்லின் 2019 செப்டம்பர்9 இல் தமிழக அமைச்சரவை முடிவெடுத்த பின் ஓரிரு நாளில் அல்லது ஓரிரு கிழமையிலாவது ஆளுநர் முடிவெடுத்திருக்க வேண்டும் .அதன் பிறகு இத்துணைக் காலமும் தமிழர் எழுவர் சிறையிலிருப்பது" illegal custody" என்னும் சட்டப்புறம்பான காவலே தவிர வேறல்ல .

சிறையில் அவர்களும் வெளியில் நாமும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டோம் .இனி பொறுத்திடோம் .இது தமிழ் மக்களின் கோரிக்கையும் எச்சரிக்கையும் ஆகும்.

ஆளுநரின் அழிச்சாட்டியம் தமிழக இறைமையை மீறுவதாகும் என்ற நிலையிலும் கூட தமிழக அரசு ஆளுநருக்கு எதிராகக் குரல் எழுப்பாமல் 'எங்கள் கடமை முடிந்தது' என்று நழுவப் பார்ப்பது எல்லாரும் கூடி நாடகமாடுகிறார்களோ என ஐயுறச் செய்கிறது.

அடுத்து என்ன செய்வது? இந்த ஆளுநரிடம் சட்டம் பேசுவதும் சைத்தானிடம் வேதம் ஓதுவதும் ஒன்றுதான் எனத் தோன்றுகிறது. பாஜகவும் காங்கிரசும் தவிர எந்தக் கட்சியும் எழுவர் விடுதலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இந்த இரு பிற்போக்குக் கட்சிகளும் எழுவர் விடுதலையை எதிர்ப்பதற்காகவே எதிர்த்து வருகின்றன. ஏன் எழுவர் விடுதலை கூடாது என்பதற்கு இந்தக் கட்சிகள் சொல்லும் காரணங்களில் ஏரணம் இல்லை.

இறந்து போன இராசீவ் காந்தி முன்னாள் தலையமைச்சராம்! இருக்கட்டுமே! இது இனி என்றுமே மாறாத உண்மை! இன்னும் ஐம்பது நூறாண்டு ஆனாலும் அவர் முன்னாள் தலைமையமைச்சராகத்தான் இருப்பார். ஆகவே இந்த எழுவரையும் உயிருள்ள வரை விடுதலை செய்யக் கூடாது என்றாகி விடும். அப்படியானால் உயர்பதவி வகித்தவர்கள் கொல்லப்படுவதற்கு வேறு தண்டனைச் சட்டம் தேவைப்படும்.

இவர்கள் விடுதலை செய்யப்படுவது பன்னாட்டு அதிர்வுகளை உண்டாக்குமாம்! இதே வழக்கில் சிறப்பு நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 26 தமிழர்களில் 19 தமிழர்களை உச்ச நீதிமன்றம் விடுவித்த போது எந்தப் பன்னாட்டு அதிர்வலையும் அடிக்கவில்லை.

காங்கிரசு ஆட்சியாளர்களும் சரி, பாஜக ஆட்சியாளர்களும் சரி, உச்ச நீதிமன்றத்தில் இதே கரடிகளை அவிழ்த்து விடத்தான் செய்தனர். இந்த வழக்கில் கொலைத்தண்டனை

குறைக்கப்பட்டதை எதிர்த்து மன்மோகன் ஆட்சி செய்து தோற்றது. பிறகு வந்த மோதி ஆட்சியும் இதே காரணங்களைச் சொல்லியே குறைசீர் விண்ணப்பம் செய்து தோற்றது.

இந்த முட்டாள்தனமான காரணங்களுக்காகவே ஆளுநர் கோப்புகளை வைக்கோற்போரில் போட்டுப் படுத்திருக்கிறார் என்றால் அதை வெளிப்படையாகச் சொல்லட்டும்.

தமிழர் எழுவரின் விடுதலைக்கான ஆணையில் ஆளுநர் உடனே ஒப்பமிடுவது தவிர வேறு வழியில்லை என்பதுதான் சட்டப்படியான நிலை. பன்வாரிலால் புரோகிதரின் உளச்சான்று அதற்கு இடந்தராது என்றால் பதவிவிலகிப் போய் விடலாம். இத்துணை நீண்ட ஆண்டுகளுக்குப் பின் எந்தமிழர் இனிய விடுமை கண்கொள்ள விடாமல் வழிமறிக்கும் புரோகித நந்தியே விலகு !என இப்படித்தான் மீளாய்வு விண்ணப்பம் முழங்குவோம்!

உரிமைத் தமிழ்த் தேசம் மின்னிதழ் ஆயிரக்கணக்கானவர்களுக்கு இலவயமாகவே அனுப்பி வருகிறோம். கைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி அனுப்பினால் உங்களுக்கும் அனுப்புவோம். புதுவை, வில்லிபுத்தூர், மதுரையில் உரிமைத்தமிழ்த்தேசம் முகப்பின் அடையாள அச்சு வெளியிடப்பட்டது, வந்திருந்த அனைவருக்கும் மின்னிதழ் அனுப்பி வைக்கப்பட்டது. மின்னிதழ் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் அனுப்பியுதவுங்கள்

-தியாகு,ஆசிரியர்


**கார்ல் மார்க்சின் பெரும்படைப்பு**

## மூலமுதல்



***இயல் ஒன்று (தூய தமிழாக்கம்)***

***முன்வெளியீட்டுத் திட்டம்***

***முன்வெளியீட்டுத் திட்டத்தில் சேர படி ஒன்றுக்கு 600 உருவாய் செலுத்துங்கள்!***

***நன்கொடையும் தரலாம்!***

***நன்கொடை ஆனாலும் முன்வெளியீட்டுக் கட்டணம் ஆனாலும், உங்கள் பங்களிப்பைப் பின்வரும் வைப்பகக் கணக்கில் செலுத்தி விட்டுத் தெரியப்படுத்துங்கள்.***

K. THIAGARAJAN,

SB A/C No. 20654748511,

ALLAHABAD BANK / AMBATTUR BRANCH,

CHENNAI - 53.

IFSC: ALLA0211909

# காசுமீரம் யாருக்கு?

**தோழர் தியாகு**

காசுமீரம் சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டு நூற்று எழுபது நாட்களுக்கு மேலாகிறது.இன்னும் எவ்வளவு காலம் இந்தக் கொடுமை தொடரும் எனத் தெரியவில்லை, காசுமீரம் குறித்து உலகில் பெரிய எதிர்வினை ஏதுமில்லை.இந்தியாவின் மற்றப் பகுதிகளும் மௌனம் காக்கின்றன.தமிழகத்தில் மட்டும் தான் ஓரளவு எதிர்ப்புள்ளது.இங்கேயும் கூட பலரிடமும் இந்தியாவின் குரலே எதிரொலிக்கின்றன.இதற்குக் காரணம் காசுமீரம் பற்றியத் தெளிவின்மையே.தெளிவின்மையைப் போக்கும் ஒரு முயற்சியே தோழர்.தியாகுவின் காசுமீரம் யாருக்கு எனும் நூல்.

(விலை உரூ 100)




நூல்களைப் பெற

தோழர்.தியாகு

8939154752

பட்டுக்கோட்டை

தோழர் இராமசாமி

9751072143

| | | | |
|---|---|---|---|
| மதுரை | கோவை | தேனி | பொள்ளாச்சி |
| கதிர்வேல் | ஞட்பன் சிவா | மதியவன் | ஆ.சத்தியபிரபு |
| 9894913820 | 9944952893. | 9600039031 | 9865995396 |

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

# சூழல் அரண் அறிக்கை:

சமந்தா

இந்தப் பிரபஞ்சத்தில் ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு என நம் பூமி மட்டும் தான் நமக்குத் தெரிந்து நாம் உயிர் வாழத் தகுதியானதாக இருக்கிறது.ஆனால் மனித இனத்தின் பொறுப்பற்ற செயல்பாடுகளால், கெடுவாய்ப்பாக பூமி கொஞ்சம் கொஞ்சமாக அந்த அற்புதமானப் பண்பை இழந்து வருகிறது. அதன் உயிர்சூழல் அழிந்து கொண்டேவருகிறது. அந்த அழிமானம் தற்பொழுது முன்னெப்பொழுதையும் விட அதிவிரைவாக நிகழ்கிறது.ஏனென்றால் இந்த மண்ணையோ, மக்களையோ பற்றி அக்கறையற்ற தன் சுயலாபத்தை மட்டுமே கணக்கு பார்க்கும் முதலாளித்துவத்தின் அனைத்தையும் அபகரிக்கும் தான்தோன்றித்தனமான திட்டமிடாத உற்பத்திமுறையும், நுகர்வுக் கலாச்சாரமும், பூமியின் இயற்கை, உயிர் வளங்களையும், மனித வளங்களையும் ஒன்றுமில்லாமல் ஒட்ட உறிஞ்சிவிட்டது. அதோடு மட்டுமல்லாமல் உயிர்ச்சூழலில் தொடர்ந்து புகையையும், அமிலத்தையும், நஞ்சையுமே கக்கிக் கொண்டிருந்தால் பூமியால் எவ்வளவு காலம் தான் தாங்க முடியும். வளிமண்டலத்தில் கரியமில வாயு, பசுமைக்குடில் வெப்ப வாயுக்களின் அளவு மிகவும் அதிகமானதில் பூமியானது அதீதமாக வெப்பமாக்கப்பட்டு காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. காலநிலை மாற்றமோ புவிவெப்பமயமாதலோ ஒரு கற்பனையானக் கருத்தாக்கம் அல்ல அதுவே இன்றைய நிகழ்வாகவும் அறிவியல் உண்மையாகவும் உள்ளது. பனிமலைகள் உருகிக் கடல்மட்டம் அதிகரித்துள்ளது. உயிர்க் கோளத்தின் சுவாசப் பரிமாற்றத்திற்குத் தேவையான நுரையீரல்களான காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டிருக்கிறது. அதன் இரத்த ஓட்டமான நீர் நிலைகள் எங்கும் நஞ்சு பரவியுள்ளது.இதனால் பெருமளவில் பல்வேறு வகையான உயிரினங்கள் அழிக்கப்பட்டுள்ளது. மனித இனம் வாழ்வதற்கு சாதகமான ஒப்பீட்டளவில் நிலையானக் காலநிலையைக் கொண்டிருந்த ஹாலோசீன் யுகத்தை மனித இனம் முடிவுக்கு கொண்டுவந்துள்ளது.

நாட்டு மக்கள் மீதே அக்கறை இல்லாத அரசுகளா காலநிலை மீது அக்கறை கொள்ளப்போகின்றன. சூழலைப் பற்றியோ, மனிதர்களைப் பற்றியோ கவலையில்லையில்லாத அரசுகளால் நாம் பெருமளவிற்கு பொருளாதார வாழ்வாதார இழப்புகளை சந்தித்துள்ளோம். பல உயிரினங்களை இழந்துள்ளோம். அப்படி இருந்த போதும் இது வரை 45 நாடுகளில்

மட்டுமே காலநிலை அவசரநிலை பிரகடனம் செய்து. காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இந்தியாவிலோ மத்திய அரசும், மாநில அரசும் பேரழிவுத் திட்டங்களை செயல்படுத்துவதில் தான் குறியாய் உள்ளன. அரசு செயல்படுத்தாவிட்டால், செயல்படுத்த வைக்க வேண்டியது மக்களின் பொறுப்பு.ஏனென்றால் செயல்படுத்தாவிடில் இறுதியில் பாதிக்கப்படப் போவது மக்களே. மாற்றம் என்பது மக்களிடமிருந்தே தொடங்கட்டும். இதையெல்லாம் அரசியல் செயல்பாடுகள் மூலமே பெருமளவில் மாற்ற முடியும் என்பது உண்மை தான். அதற்காக சமூகமாற்றத்தில் தனிநபரிடம் ஏற்படும் மாற்றம், அதன் பங்கு குறித்து குறைத்து மதிப்பிட வேண்டும் என்பதும் அவசியமில்லை. தனி நபரிடம் ஏற்படும் மாற்றம் அவருடன் முடிவடைந்து விட்டால் நாம் அப்படி தான் கருத முடியும்.ஆனால் அதுவே ஒரு சமூக வினையூக்கியாக தொடர்வினை ஏற்படுத்தி சமூக மாற்றத்தை விரைவுபடுத்தவும் காரணியாகவும் இருக்கலாம் என்பதையும் மறக்கக் கூடாது. ஒரே நேரத்தில் அரசு வழியிலான பெரும சமூக மாற்றத்திற்காகவும்,தனி நபர் வழியிலான நுண்ம சமூக மாற்றத்திற்காகவும் இணைந்து செயல்படவேண்டியது அவசியம் என்பதை நாம் உணரவேண்டும். காலநிலை மாற்றத்திற்கானத் தீர்வாக பசுமை முதலாளித்துவத்தை (Green Capitalism) முன்வைக்கும் போக்கும் காணப்படுகிறது.முதலாளித்துவம் எப்பொழுதுமே பசுமையான நினைவுகளைக் கூடத் தந்ததில்லை.முதலாளித்துவத்தின் பச்சையான அகோர லாபவெறியை எந்தப் பசுமைப் போர்வையாலும் மறைக்கமுடியாது என்பதே உண்மை.அதற்காக முதலாளித்துவ அமைப்பில் இதற்கு தீர்வில்லை என்பதால் இப்பொழுது காலநிலை நீதிக்காகப் போராட வேண்டாம் என விட்டுவிடமுடியுமா. இப்பொழுது தான் அதிகம் போராட வேண்டியது அவசியம். நாம் அழிவின் விழிம்பில் நிற்கிறோம் என்பதை மறக்க வேண்டாம்.அழிவது முதலாளித்துவ அமைப்பாக இருக்கட்டும்.காக்கப்படுவது. நம் உயிர்க்கோளமாக இருக்கட்டும்.புவியின் உயிர்க் கோளம், ஒரு கூட்டுயிரி, நாம் காட்டில் இருந்தாலும் சரி, நாட்டில் இருந்தாலும் சரி, மனித இனம் இந்த மாபெரும் உயிர்க் கோள வலை பின்னலில் ஒரு நுண்ணிய இழை அவ்வளவு தான். இந்த உயிர்க் கோளத்தின் உயிர்ச் சூழல் காக்கப்படவேண்டும் என்றால் அதற்கு மனித இனத்தின் இருப்பு மட்டும் போதாது, பல்வேறு வகையான பன்மயமான தாவரங்கள், பறவைகள், பூச்சியினங்கள், விலங்குகள் இருந்தாலொழிய சூழல் சமநிலையை நம்மால் பாதுகாக்க முடியாது.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

நம் முன்னோர்களிடமிருந்த பெற்ற இப்பூமியை நம் வருங்கால சந்ததியினரிடம் இன்னும் நேர்த்தியாகவும், சிறப்பாகவும் ஒப்படைக்க வேண்டியப் பொறுப்பு நம்மிடம் உள்ளது. பூமி மனுதனுக்கு சொந்தம் அல்ல, மனிதன் தான் பூமிக்கு சொந்தம் என்பதையே நம் செவ்விந்தியத் தோழர் சியாட்டிலிலிருந்து, நம் அய்யா நம்மாழ்வார் வரை இயற்கை மீது பற்று உள்ள அனைவரும் திரும்ப திரும்ப உணர்த்தியிருக்கிறார்கள். ஆதிமனித இனம் இயற்கையை மதித்துப் போற்றுவதாகவே இருந்துள்ளது.இயற்கையைப் போற்றும் சமூகமாக தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு நம் சங்க இலக்கியங்களே சான்று பகர்கின்றன. காலப்போக்கில் மனித இனம் இயற்கையை மதிக்கவும், பாதுகாக்கவும் தவறியதால், நஞ்சையே விதைத்ததால் நம் பூமித்தாய் காய்ச்சல் கொண்டிருக்கிறாள், இரண்டு நாளில் சரியாகும் சாதாரணக் காய்ச்சல் அல்ல அது. உயிரைப் போக்கும் விசக்காய்ச்சலால் உயிர்க் கோளம் சின்னாபின்னமாக்கப் பட்டுள்ளது.இதைப் பற்றி அதிகம் உணர்ந்து கொதித்துப் போனக் குட்டிப் பெண் கிரெடா த்யுன்பெர்க் காலநிலை மாற்றத்தை உலகமே உணர்ந்து விழிப்பு பெறுமளவிற்கு போராடியுள்ளார். அதற்கு புவியர்கள் அனைவரும் அவருக்கு நன்றி பாராட்ட வேண்டும். நமக்கு நம்பிக்கையூட்டும் விதமாக கால நிலை நீதிக்கான போராட்டத்தை உலகெங்கும் இளம் போராளிகள் முன்னெடுத்து அதில் அனைத்து தரப்பினரையும் உள்ளிழுத்து செல்கின்றனர். அவர்களோடு அற வழியில் நாமும் இணைந்து செயலாற்றுவோம்.இயற்கையை மதித்து நேசித்து செயல்படும் சமூகத்தைக் கட்டமைப்போம்.

## நெருங்கும் பெருமந்தம்:

**சமந்தா**

புத்தாண்டு பிறந்தும், தை பிறந்தும் வழி பிறக்கவில்லை, பொங்கலில் பொங்கியது என்னவோ உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வும், வேலையின்மையும், மக்களின் கண்ணீரும், கோபமும் தான்….பாஜக மோடி ஆட்சியில் பொங்கலும் புளிக்கும், கரும்பும் கசக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.2019ல் அரிசி உற்பத்தி 8% அளவிலும், சோள உற்பத்தி 11%அளவில் குறைந்துள்ளது. உளுத்தம்பருப்பு(18.38%) துவரம்பருப்பு(10.47%) போன்ற பயறுவகைகளின் உற்பத்தியும் மிகவும் குறைந்துள்ளது.எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 24% குறைந்துள்ளது, சர்க்கரை உற்பத்தி 22%குறைந்துள்ளது.காய்கறிகளின் உற்பத்தியும் குறைந்துள்ளது.பாஜக் அரசு விவசாயத் துறைக்கு ஒதுக்குவதாக உறுதியளித்த நிதியில் 28% வெட்டியுள்ளதை இங்குக் குறிப்பிடவேண்டும்.இந்திய தொழிற்துறை உற்பத்தியில் 40% பங்களிப்பு

செய்யும் 8 முதன்மை தொழிற்துறைகளின் உற்பத்தி 2018 நவம்பரில் 3.3% ஆக இருந்தது 2019 நவம்பரில் 1.5% குறைந்தது. இதில் மின்சாரம் (-5.7%), உருக்கு(-3.7%), நிலக்கரி (-2.5%), எரிவாவாயு (-6.8%), கச்சா எண்ணெய் (-5.7%) ஆகியவற்றின் உற்பத்தி குறைந்துள்ளது. தேசியப் புள்ளிவிவர அலுவலகம் வெளியிட்டுள்ள தேசிய வருவாய் பற்றிய கணிப்பு மதிப்பீட்டின்படி உற்பத்தித் துறை வீழ்ச்சியினால் நாட்டின் பொருளாக்க மதிப்பின் வளர்ச்சி மந்தமடைந்துள்ளது, கடந்த நிதியாண்டில் 6.2% ஆக இருந்த உற்பத்தித் துறை வளர்ச்சி 2%ஆகக் குறைந்தது.விவசாயத் துறை, தொழிற்துறை இரண்டிலுமே உற்பத்தியில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. .மக்களின் நுகர்வுத்திறனும், பணக்கையிருப்பும் ஏற்கெனவே குறைந்துள்ள நிலையில் நுகர்வுப் பொருட்களின் விலைவாசி உயர்வால் 5 1/2 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு டிசம்பரில் பணவீக்கத்தின் அளவு 7.35%ஆக உயர்ந்துள்ளது. நவம்பரில் 1.93%ஆக இருந்த உணவல்லாத பொருட்களின் விலைவாசி உயர்வு டிசம்பரில் 7.72%.நான்கு மடங்கு உயர்ந்தது. உணவுப் பொருட்களின் விலைவாசி டிசம்பரில் 13.12% அதிகரித்துள்ளது.இது அவர்களின் நுகர்வுத்திறனை மேலும் குறைத்து பட்டினியையும், வறுமையையே அதிகரிக்கும். தேசிய மாதிரி கணக்கீட்டு அலுவலகத்தின் அறிக்கையின் படி மக்களின் நுகர்வு திறன் 2011-12-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017-18-ல் 3.7 சதவீதம் அளவில் சரிந்துள்ளது. குறிப்பாக கிராமப்புறத்தில் நுகர்வு திறன் 10% சரிந்துள்ளது. இந்த 7 ஆண்டுகளில் வறுமைக் கோட்டுக்குகீழ் இருப்பவர்களின் எண்ணிக்கை 4 சதவீதம் அதிகரித்து கூடுதலாக 3 கோடி பேர் வறுமைக் கோட்டுக்கு கீழேத் தள்ளப்பட்டுள்ளனர். விலைவாசி இருமடங்காகிவிட்ட நிலையில், தனிநபர் வருவாய் 7 ஆண்டுகளுக்குமுன் எந்த நிலையில் இருந்ததோ, அதே நிலையில்தான் தற்போதும் இருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்தியாவில் 30% குழந்தைகள் கொடிய வறுமையால் வாடுவதாக யுனிசெ.்ப் அறிக்கை கூறுகிறது.தேவையின் வீழ்ச்சியைக் குறைத்து மக்களின் நுகர்வுத் திறனை அதிகரிக்க அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக அரசின் செயல்பாடுகள் மக்கள் மேலும் துயருறும் வகையில் தேவையையும், நுகர்வையும் மேலும் குறுக்குமாறான நடவடிக்கைகளிலே தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது. சமையல் எரிவாயு விலையையும், ரயில் பயணிகள் கட்டணத்தையும் மத்திய அரசு உயர்த்தியுள்ளது. கடந்த 5 மாதங்களில் மட்டும் சிலிண்டர்விலை 140 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது கச்சா எண்ணெயின் விலையும் ஐக்கிய அமெரிக்காவின் அடாவடியால் ஈரானில் ஏற்பட்ட பதட்ட நிலையால் எகிரும் போக்கில் உள்ளது.

ஏற்கெனவே நிதி நிலை அறிக்கையில் வாக்களித்ததைக் காட்டிலும் அரசு செலவீனங்களைக் குறைத்துள்ள நிலையில் தற்போது,மத்திய அரசு வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவினங்களை மேலும் 2 லட்சம் கோடி குறைக்க உள்ளது , மொத்த ஒதுக் கீட்டில் 7 சதவீதம் வெட்ட உள்ளது கடும் கண்டனத்திற்குரியது. ஏற்கெனவே கல்விக்கு ஒதுக்கப்பட்டதில் 3000 கோடியை வெட்டியுள்ளது.இது அரசு நிதிப்பற்றாக்குறையைக் கட்டுக்குள் வைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையாகக் கருதப்பட்டாலும் பெருமுதலாளிகளுக்களுக்கு 1.5 லட்சம் கோடி சலுகை அளிக்கும் போது அதிகரிக்கும் நிதிப்பற்றாக்குறையைப் பற்றி மட்டும் ஏன் அரசு கவலைப்படவதில்லை?.

இந்நிலையில் தற்பொழுது ரூ.102 கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டங்கள் மூலம் இந்தியாவை ,2025-ம் ஆண்டில் 5 லட்சம் கோடி டாலர் பொருளாதாரமாக உயரும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று வாய் கூசாமல் பொய் சொல்கிறார்கள்.இத்திட்டத்தில் 39 சதவீதம் மத்திய அரசு மூலமும், 22 சதவீதம் தனியார் துறை மூலமும், 39%, மாநில அரசு செயல்படுத்தும் எனக் கூறப்பட்டாலும் இதுவும் ஒரு வாய்ப்பந்தல் திட்டம் தான். டிசம்பரில் மத்திய அரசு பெற்ற ஜிஎஸ்டி வரி வருவாய்; தொடர்ந்து 2-வது மாதமாக ரூ.1 லட்சம் கோடியைத் தாண்டி ரூ.1.03 லட்சம் கோடியாக உள்ளது. இது கடந்த 2018-ம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது, ஜிஎஸ்டி வரி வருவாய் 16 சதவீதம் அதிகரித்துள்ளது.மாநிலங்களுக்கு வழங்காமல் அரசு தொகு நிதியில் உள்ள 3.59 லட்சம் கோடி ஜி.எஸ்.டி செஸ் நிதியை பாஜக அரசு வைத்துள்ளது.இருப்பினும் மத்திய அரசு தமிழகத்துக்கு தரவேண்டிய ஜிஎஸ்டி நிதியில் ரூ.4,073கோடியை வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளது.;கடந்த 2018 ஆண்டில் மட்டும் இந்தியாவில் 1.34 லட்சம் பேர் தற்கொலை செய்து கொண்டனர் என தேசிய குற்ற ஆவண காப்பகம் தனது புள்ளிவிரத்தை வெளியிட்டுள்ளது. தற்கொலை செய்து கொண்டவர்களில் 7.7 சதவீதம் பேர் (10,349) விவசாயிகள் மற்றும் விவசாய கூலித்தொழிலாளர்கள், விவசாயிகளின் மேம்பாட்டுக்காக எந்த நடவடிக்கையையும் எடுக்காத் அரசு மீண்டும் காவிரி விவசாய மண்டலங்களை நாசமாக்க மீத்தேன் திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்துள்ளது. பாஜக அரசு ஹைட்ரோ கார்பன் திட்டத்தைச் செயல்படுத்த சுற்றுச்சூழல்துறையின் அனுமதி தேவையில்லை, மக்களிடம் கருத்து கேட்கவும் அவசியமே இல்லை என ஆணை பிறப்பித்துள்ளது. மற்ற நாடுகளில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள அவசரநிலை பிரகடனம் செய்கிறார்கள்.மக்களுக்கு எதிரான திட்டங்களை திரும்பப்

பெறுகிறார்கள். அதற்கு நேர்மாறாக இந்தியாவில் அலட்சியத்திலும், அகம்பாவத்திலும் தன்னிகரற்ற பாஜக அரசு செயல்படுகிறது.

விவசாயிகளுக்கான தங்கக்கடனுக்கான வட்டி மானியத்தையும் மத்திய அரசு நிறுத்தியுள்ளது.விவசாயிகள் கடன் தள்ளுபடியால் தான் வங்கிகள் நட்டமடைகின்றன என்பது பொதுக்கருத்தாக மாற்றப்பட்டுள்ள நிலையில் தரவுகளின்படி பார்த்தால் கோடிக்கணக்கில் கடன் வாங்கி மோசடி செய்யும் தொழில் அதிபர்களாலே வங்கிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்பது தெரிய வரும்.2019-20-ம் ஆண்டில் நடந்த 398 வங்கி மோசடிகளில் அனைத்துமே ரூ.50 கோடிக்கு மேற்பட்டவை, இதன் மதிப்பு ரூ.1.05 லட்சம் கோடியாகும்.

கறுப்பு பணத்தை ஒழிப்போம் என்று கூறி கருப்பு பணத்தை வெள்ளை பணமாக்கிய பாஜக அரசின் நிதியமைச்சகம் சுவிஸ் வங்கியில் கருப்பு பணம் பதுக்கியவர்கள் விவரத்தை வெளியிட முடியாது:என்பது கறுப்பு பணத்தை பதுக்குபவர்களின் பாதுகாவலனாகவே பாஜக அரசு செயல்படுகிறது என்பதையே காட்டுகிறது.

தற்போது ஏற்பட்டு இருக்கும் பொருளாதார மந்தநிலைக்கு பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி போன்ற நடவடிக்கைகள் முக்கிய காரணம் என்று நிதி ஆயோக் உறுப்பினர் அகர்வாலா குறிப்பிட்டுள்ளார். திவால் நடவடிக்கைச் சட்டமும் முறையான திட்டமிடல் இன்றி கொண்டு வரப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசின் நவீன தாராளமயக் கொள்கையாலும், ஜி.எஸ்.டி, பணமதிப்பிழப்பால் 10% ஆக உயர்ந்த வேலையின்மை 2020ல் அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. 2019 ஐ விட 2020ல் 16லட்சம் வேலைகள் குறையும் என எஸ்.பி.ஐ வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது.

.2018-19 நிதி ஆண்டில் அரசு ரூ.1.05 டிரில்லியன் அளவில் பொதுத் துறை நிறுவனங்களில் பங்கு விலக்கல் (தனியார்மயம்) மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்திருந்தது. ஆனால், இலக்கில் ஏப்ரல் முதல் நவம்பர் வரையில் ரூ.17,364 கோடி அளவிலேயே பங்குவிலக்கல் 17% மட்டுமே மேற்கொள்ளப்பட்ட நிலையில் தற்போது பொதுத்துறையின் மற்ற சொத்துக்களான கட்டிடம், வளாகம் என எதையெல்லாம் விற்க முடியுமோ அதையெல்லாம் விற்க உள்ளது.மஹாபாரதத்தில் அர்ஜீனன் சூதாடினாரா என்று தெரியாது. பாஜக அரசு அர்ஜுனனை விட படு மோசமான சூதாடியாக உள்ளது.அர்ஜீனன் தனது சொத்துக்களை மட்டும் சூதாடினார் என்றால் பாஜக மக்கள் சொத்துக்கள் அனைத்தையும் தனியாரிடம் சூதாடி வருகிறது.

நிதிப்பற்றாக்குறையைக் குறைக்க நிதிமூலங்களை விற்கும் முட்டாள்தனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை இந்த சூதாட்டம் தான் தொடரும்.

விலைவாசி உயர்வுக்கேற்ப உழைப்பவர்களுக்கு ஊதிய உயர்வு ஏற்படவில்லை.உயர்ந்ததென்னவோ பாஜகவின் வருமானம் தான் சென்ற 2018-19-ம் நிதியாண்டில் பாஜகவின் மொத்த வருமானம் ரூ.2,410 கோடியாக உயர்ந்துள்ளது. இது முந்தைய நிதியாண்டை விட 134 சதவீதம் அதிகமாகும். பிஎஸ்என்எல் நிறுவனத்தை அதன் சொத்துகளை விற்று நிதி திரட்டும் முயற்சியில் தள்ளிய பாஜக அரசு அம்பானியின் ரிலையன்ஸ் நிறுபனத்தை இந்த ஆண் டின் இந்தியாவின் முதல் முன்னணி நிறுவனமனமாக உயர்த்தியதில் பாஜக பெரும்பங்கு வகித்துள்ளது.

அம்பானியின் சொத்து மதிப்பு இந்த ஆண்டில் 41.2 சதவிகிதம் உயர்ந்துள்ளது. ரிலையன்ஸ் நிறுவன அடிப்படையில் சொத்து மதிப்பு ரூ.10 லட்சத்து 1555 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும் அமேசான், ஃபிளிப்கார்ட் போன்ற இணைய வர்த்தக நிறுவனங்களுக்குப் போட்டியாக ரிலையன்ஸின் ஜியோமார்டை இறக்க அரசு ஊக்கப்படுத்திவருகிறது.

உலகத்தின் பொருளாதார சமமின்மை மிகவும் அதிகரித்துள்ளதாக சர்வதேச பண நிதியத்தின் மேலாண்மை இயக்குனரே கவலைதெரிவித்துள்ளார். நான் சாப்பிட ஆடு சாகணுமேனு ஓநாய் அழுதது போல், இஸ்லாமியர்களுக்காக பாஜக கவலைப்படுவது போல் தான் இருக்கிறது பொருளாதார சமமின்மை பற்றிய சர்வதேச பண நிதியத்தின் கவலையும். பொருளாதார சமமின்மைக்கு காரணமானவர்களே ஏன் அதைப் பற்றி அக்கறை காட்டவேண்டும்?. ஏனென்றால் சந்தை சரியாக இயங்கவேண்டும் இல்லையா, பொருளாதார பெருமந்தம் வந்தால் சந்தை படுத்துவிடும். ஒவ்வொரு பொருளாதார பெருமந்தத்தின் முன்னும் பொருளாதார சமமின்மை மிகவும் அதிகரித்துள்ளது என்பது அவர்களுக்கு தெரியும். உண்மையிலே பொருளாதார சமமின்மையை குறைக்கவேண்டும் என்ற அக்கறை இருந்தால் முதலில் உலகவங்கி, சர்வதேச பண நிதியம் போன்ற பெரும் வட்டிக் கடைகளை, சர்வதேச ஜனநாயக அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

இந்தியாவில் உள்ள ஒரு சதவீதபெரும் பணக்காரர்களின் மொத்தசொத்து மதிப்பானது 70 சதவீதமக்களின் சொத்து மதிப்பை விடநான்கு மடங்கிற்கும் அதிகமாக உள்ளது என்றும்.இந்தியாவில் 63 கோடீஸ்வரர்களிடம் உள்ள சொத்து மத்திய அரசின் ஓராண்டு பட்ஜெட்டை விட அதிகம்: ஆக்ஸ்ஃபாம் அறிக்கை கூறுகிறது.கடந்த 10 ஆண்டுகளில்


கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை இரு மடங்காக உயர்ந்துள்ளது.உலகம்முழுவதும் ஏழை-பணக்காரார்இடையிலான பொருளாதார சமமின்மை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் பெண்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகில் மொத்தம் உள்ள 2,153 கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பானது 460 கோடி மக்களின் சொத்து மதிப்பை விட அதிகமாக உள்ளதாகவும் பணக்காரர்கள் தாங்கள் செலுத்தும் வரித் தொகையின் அளவை விட 0.5 சதவீதம் கூடுதலாக அடுத்த 10 ஆண்டுகளுக்கு செலுத்தினால் அதன் மூலம்11.70 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம். அதேபோல முதியோர், குழந்தை நலன், கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவற்றுக்கு கூடுதலாகச் செலவிட முடியும் என்று ஆக்ஸ்பார்ம் அறிக்கை தெரிவித்துள்ளது.இந்தியாவின் பிரத்யேக பொருளாதார நிலைகளை நுணுக்கமாகத் தெரிந்த கொள்ள சமூகப் பொருளாதார அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பு அவசியம்.மத்திய அரசு 2021 ஆம் ஆண்டின்மக்கள்தொகை கணக்கெடுப்பிற்காக 8754 கோடி ஒதுக்கியுள்ளது. சிறுபான்மையினரின் குடியுரிமையை நீக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட குடியுரிமைத் திருத்த சட்டத்தை செயல்படுத்த தேசிய மக்கள் பதிவேட்டுக்காகவும் 3941 கோடி மத்திய அரசு ஒதுக்கியுள்ளது பெரும்கவலையளிக்கிறது. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை எடுக்கப்படும் பொருளாதார கணக்கெடுப்பு நாட்டு மக்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளை அறியவும் அதன் அடிப்படையில் பொருளாதாரத்தை திட்டமிடவும், செயல்படுத்தவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. மக்கள் நல அரசு கணக்கெடுப்பில் கூடுதல் அக்கறையுடன் நம்பகத்தன்மையுடனும் செயல்படுத்த வேண்டும். ஆனால் பாஜக அரசு அதைக் குலைக்கும் வகையில் அதனுடன் தேசிய மக்கள் பதிவேட்டையும் கோர்த்து பொருளாதார கணக்கெடுப்பையும் பாழ்படுத்துவது பெரும் வேதனையளிக்கிறது.ஏற்கெனவே மத்திய புள்ளியியல் துறையின் நம்பகத்தன்மையை சீரழித்த பாஜக அதன் நீட்சியாக பொருளாதார கணக்கெடுப்பிலும் குளருபடி செய்வது மன்னிக்க முடியாத குற்றம்.

நெருங்கிவரும் பொருளாதார பெருமந்தத்தைத் தவிர்க்க அரசு சமூக நலத்துறைகளுக்கான நிதிஒதுக்கீட்டை அதிகரிக்கவேண்டும். ஆனால். நிதிப்பற்றாக்குறையை 3-3.5% க்குள் வைக்கவேண்டும் என்று அரசு சமூக நலத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துக் கொண்டே வருகிறது.அது நவீன தாராளமயம் விதிக்கும் கட்டளை இல்லையேல் அந்நிய முதலீடுகள் வெளியேறிவிடும். பங்கு சந்தை சரியும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்பார்கள்.ஆனால் வல்லரசுகள் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா இதிலிருந்து

விதிவிலக்கானவர்கள்.அவர்களுக்கு நிதிப் பற்றாக்குறை 3%க்குள் இருக்கவேண்டும் என யாரும் ஆணையிட முடியாது.ஆணைகளை அவர்களே உருவாக்குவார்கள்.2019ல் பங்கு சந்தை ஏற்றம் கண்டது. ரூ1.33 லட்சம் கோடிஅளவில் அ ந் நிய முதலீடுகள் உள்ளே வந்தன. அதனால் இந்தியாவின் வேலையின்யும் விலைவாசி உயர்வும், பொருளாதார நெருக்கடி யும் அதிகரித்ததே தவிர குறையவேயில்லை. அதனால் மக்களின் வரிநிதியில் அந்நிய முதலீடுகளையும், அம்பானி, அதானிகளையும் கவருமாறு நிதிநிலை அறிக்கை போட்டால் மக்களாகிய நாங்கள் எதிர்த்துப் போராடவே செய்வோம்.உலகெங்கும் முட்டாள்கள் தினம் ஏப்ரல்1 என்றால் இந்தியாவுக்கு மட்டும் இரண்டு மாதம் முன்னரே பிப்ரவரி-1ல் வருகிறது. இந்த முறை முட்டாளாகி ஏமாறமாட்டோம்.எதிர்த்துப் போராடுவோம்.

## காலநிலை மாற்றத்தில் அல்பீடோ விளைவு:

சமந்தா




நாம் வெயில் காலத்தில் வெப்பத்தின் தாக்கத்தைக் குறைக்க வெளிர் நிற ஆடைகளை அணிகிறோம்.ஏனென்றால் வெளிர் நிற ஆடைகள் அதிக அல்பீடோ மதிப்பைக் கொண்டிருக்கும். அல்பீடோ என்றால் என்ன?.அல்பீடோ என்றால் லத்தீனில் வெண்மை என்று பொருள். அல்பீடோ மதிப்பு என்பது வெளியில் ஒரு பொருளின் பிரதிபலிக்கும்/எதிரொளிக்கும் திறனைக் குறிக்கிறது.அதாவது ஒரு பொருள் எந்த அளவிற்கு சூரிய ஒளிக்கதிரை பிரதிபலிக்கிறது எந்த அளவு உட்கிரகிக்கிறது என்பதைக் குறிக்கும்.இதன் மதிப்பு பூஜ்ஜியத்திலிருந்து ஒன்று வரை இருக்கும். ஒரு சிறந்த எதிரொளிக்கும் தளத்தின் அல்பீடோ மதிப்பு 1. முழுக் கரும் பொருளின் அல்பீடோ மதிப்பு 0. இயற்கையில் யாவும் கருப்பு, வெள்ளையாக மட்டும் இல்லையே.அதனால் அவற்றின் அல்பிடோ மதிப்பு 0விலிருந்து 1 வரை வேறுபட்ட பல மதிப்புகளைக் கொண்டிருக்கும். பூமியின் அல்பீடோ விளைவு, புவிப்பரப்பின் எதிரொளிக்கும் திறன் அதன் காலநிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.புவிப்பரப்பின் எதிரொளிப்பு திறன் குறையும் போது, சூரியனிலிருந்து வரும் வெப்பக் கதிர்வீச்சை அதிக அளவில் பூமி உட்கிரகிப்பதால் உலகின் வெப்பம் அதிகரிக்கும்.

பளபளப்பான வெண்பனி சூழ்ந்த பகுதிகள் பெருமளவில் வெப்பத்தை எதிரொளிக்கும். ஆனால் அந்தப் பகுதியின் பனி உருகும் போது அல்பீடோ குறைந்து விடும்.இது அதனால் அதிக அளவு சூரிய ஒளி உட்கிரகிக்கப்படுவதால் அப்பகுதியின் வெப்பம் அதிகரிக்கும். புவிவெப்பமயமாதலால் உருகும் துருவப் பனிப்பாறைகள் புவிவெப்பமாதலை மேலும் அதிகரிக்கும். இது பனி வெப்ப பின்னுட்டம் (snow temperature feedback)என்றழைக்கப்படுகிறது.

மேகங்கள் சூரிய ஒளியை பிரதிபலிக்கும், அதே நேரத்தில் புவியிலிருந்து வெப்பத்தை வெளியேர விடாமல் தக்க வைக்கும். எந்நேரத்திலும் பூமியை சுற்றிலும் பாதி அளவிற்கு மேகங்கள் சூழ்ந்துள்ளதால் அது காலநிலையில் முக்கியத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அல்பீடோ விளைவு புவிவெப்பமாதலில் எப்படி தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று பார்ப்போம்.ஆர்டிக் குறித்து கவலையளிப்பது என்னவென்றால் இப்பொழுது அது பூமியின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் இருமடங்கு விரைவாக வெப்பமயமாகிறது. இதை விஞ்ஞானிகள் ஆர்டிக் பெருக்கம் (Arctic amplification) என்று அழைக்கிறார்கள். உலகின் மற்ற பகுதிகள் தொழிற்மயமாக்கம் ஏற்படுவதற்கு முன்னிருந்த வெப்பநிலையை விட ஒரு டிகிரி அதிகமாகும் போது, ஆர்க்டிக்கில் 2 டிகிரி அதிகமாகியுள்ளது, கிரன்லாந்தில் சில பகுதிகளிலும், சைபீரியாவிலும் இதே போல் உள்ளது. இதில் இரு கவலைக்குரிய விசயங்கள் உள்ளன. ஆர்க்டிக்கை சூழ்ந்துள்ள பனி, கடலில் மிதக்கும் பனி, வட துருவத்திலிருந்து ஆர்க்டிக்கை சுற்றிலும் உள்ள பனிப்பாறைகள் கடந்த 20 ஆண்டு காலத்தில் மிகவும் குறைந்துள்ளது. இது மனிதன் தோற்றத்திற்கு பின் புவிச்சூழலில் ஏற்படுத்திய மிகப்பெரும் இயற்கை மாறுபாடு.ஆர்க்டிகின் பனி குறைந்த போது அதன் எதிரொளிக்கும் திறனும் குறைந்தது.பனி வெண்மையாகவும், பளபளப்பாகவும் இருப்பதால் அதனால் சூரிய ஒளியை பெருமளவில் பிரதிபலிக்க முடியும்.உறைபனியின் அல்பீடோ மதிப்பு 0.5-0.7 என்பதால் 70% வரை ஒளிக்கதிரை பிரதிபலிக்க முடியும். புதுப்பனி அல்பீடோ மதிப்பு 0.9 வரை இருக்கும் என்பதால் 90% ஒளிக்கதிரை பிரதிபலிக்க முடியும்ஆனால் உறைபனி உருகியதால் வெளிப்பட்ட கடல்பரப்பானது அதிக ஒளியை உட்கிரகித்துக் கொள்ளும். கடல் நீரின் அல்பீடோ மதிப்பு 0.06, அதாவது கடல் நீரால் 6% ஒளிக்கதிரை மட்டுமே பிரதிபலிக்க இயலும் என்பதால் அது ஒரு பின்னூட்ட விளைவை ஏற்படுத்தும்.அதிகமான கடல் நீர் பரப்பு உறைபனியுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த அளவே ஒளிக்கதிரை பிரதிபலிக்கிறது என்பதால் வெப்பத்தை அதிகரிக்கும்.வெப்பம் அதிகரிப்பதால், அதிக அளவில் ஆர்க்டிக் பனியை இழப்பது இன்னும் அதிக அளவில் ஆர்க்டிக்

பனியிழப்பை ஏற்படுத்தும். 2019ல் இது வரை வரலாறு காணாத அளவிற்கு ஆர்க்டிக் பனி உருகியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இது போல் அதிக அளவில் ஆர்க்டிக் பனி குறைந்து வருகிறது. கடல் பனி உருகுவதால் கடல் மட்டம் அதிகரிப்பதில்லை எனினும் இதனால் கிரீன்லாந்தின் பனிப் பாறைகள் பெருமளவு உருகியுள்ளது. இதனால் கடல்மட்டம் மற்றும் கடல்பரப்பும் அதிகரித்துள்ளது. இது பெருமளவு வெள்ள அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.இதே போல் தான் அண்டார்க்டிக், பூமியின் மற்ற பகுதிகளும் பாதிக்கப்பட உள்ளது. ஆர்டிக்கில் போல் கிரீன்லாந்திலும் பின்னூட்ட விளைவால் பனி அதிகரிக்கும் அபாயம் உள்ளது. கிரீன்லாந்து பெரும் பனிப்பாறைகள் உருகும் போது அதன்.உயர மட்டம் குறையும்.குறைந்த உயரமட்டத்தில் வெப்பம் அதிகம் என்பதால், கிரீன்லாந்தின் மேல்பரப்பு உருகும் போது, அதன் பனிப்பாறைகளின் உயரமட்டம் குறைவதால் அது வெயில் காலத்தில் மேலும் அதிகமாக உருகும்

விஞ்ஞானிகள் கடந்த சில ஆண்டுகளில் பனிப் பாறைகளின் நிறம் கருமையடைவதைக் கண்டுள்ளனர்.பனிப்பொழிவுகள் குறைவதாலும், பாக்டீரியா, ஆல்கே போன்றவை வளர்வதாலும், புகைக்கரி படிவதாலும் பனியின் நிறம் மங்குவதால் அதன் பிரதிபளிக்கும் திறன் குறைகிறது.இந்தப் பின்னூட்ட விளைவால் கிரீன்லாந்து அதிகம் உருகுவது மேலும் கிரீன்லாந்து அதிகம் உருகுவதையே தூண்டுவதாக அமைகிறது…

## காலநிலை மாற்றத்தில் அல்பீடோ விளைவு


## நகர் வெப்பத்தீவு விளைவு (Urban heat island effect):

சமந்தா

:

பூமியின் சராசரி வெப்பநிலையை இரண்டு முக்கியக் காரணிகள் நிர்ணயிக்கிறது. முதலாவது வளிமண்டலத்தில் கரியமில வாயு போன்ற பசுங்குடில் வாயுக்களின் அளவு, இவை வளிமண்டலத்தில் பிரதிபலிக்கப்படும் அகச்சிவப்புக் கதிர்வீச்சின் அளவைக் குறைப்பதால் புவியின் வெப்பநிலையை அதிகரிக்கிறது.இரண்டாவது.பூமியின் பிரதிபலிக்கும் தன்மை, அல்பீடோ மதிப்பு அது பூமி எந்த அளவிற்கு சூரிய ஒளியை உட்கிரகிக்கிறது என்பதைக் குறிக்கிறது. சூரியஒளி வளிமண்டலத்தில் உள்ள துகள்களாலும், மேகமூட்டங்களாலும் பிரதிபலிக்கப்படுகிறது. மிகவும் வளர்ச்சி பெற்ற நகரங்களில் அல்பீடோ விளைவால், புறநகர்,கிராமப்பகுதிகளைக்

காட்டிலும் அதிக வெப்பநிலை காணப்படுகிறது. இதையே நகர் வெப்பத் தீவு விளைவு என்கிறோம்.குறைந்த மரம்,செடி,கொடிகள், அதிகமான மக்கள் அடர்த்தி, வெயில் காலங்களில்




அதிக வெப்பத்தை உள்வாங்கும் அடர்நிற உள்கட்டமைப்புகள் நிலக்கீல் சாலைகள், செங்கல் கட்டிடங்கள்.கொண்டிருப்பதால் நகர்புறங்கள் சுற்றுபுறங்களைக் காட்டிலும் 6-8 டிகிரி ஃபாரன்ஹீட் அதிக வெப்பநிலையைக் கொண்டிருக்கும்.சாலைகள், மேற்கூரைகள், வாகன நிறுத்துமிடங்களின் குறைந்த பிரதிபலிப்புத் திறன் கொண்டிருப்பது அதிக வெப்பத்திற்கான முக்கியக் காரணியாக உள்ளது. கோடையில் நகரங்களில் சுற்றுபுறங்களை விட கடும் வெப்பத்தைக் கொண்டிருக்கும். காலநிலை மாற்றத்தாலும், நகரமயமாக்கலினாலும் இந்த நகர வெப்பத் தீவு விளைவின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என்பதால் அதற்கேற்ற கட்டமைப்புகளை ஏற்படுத்துவது அவசியம். நகர வெப்பத் தீவு விளைவு என்ற காலநிலை நிகழ்வு 19ஆம் நூற்றாண்டில் பெரும் நகரங்கள் உருவெடுத்துதலிருந்தே அறியப்படுகிறது. நகரக் கட்டமைப்பு, சாலைகளுக்கு தேவையான பொருட்கள் மிகக் குறைந்த அளவே சூரிய ஒளிக்கதிரை பிரதிபலிக்கிறது அவை பதிலீடு செய்த மரம், செடி தாவர வெளிகளைக் காட்டிலும் அதிக வெப்பத்தை உட்கிரகித்து அந்த வெப்பக் கதிர்வீச்சை சுற்றிலும் உள்ள வளிமண்டலத்தில் வெளியிடுகிறது.அடர்நிறப் பரப்புகளை வெண்மைப்படுத்தினால் வெப்ப அலையின் தாக்கத்தை 2 பாகைக்கு மேல் குறைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.மாலை நேரங்களில் சில நகரங்களில் சராசரி காற்றின் வெப்பம் சுற்றியுள்ள பகுதிகளைக் காட்டிலும் 5.5 டிகிரி செல்சியஸ் அளவிற்கு அதிகமாகக் காணப்படுகிறது. இதனால்.நகரங்களில் வாழ்வோர் வெப்பம் சார்ந்த உடல் நலக் கோளாறுகளால் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.புதிதாய் போட்ட நிலக்கீல் சாலை 95% வரை சூரிய ஒளியை உட்கிரகிக்கிறது.ஆனால் போக போக அதன் உட்கிரகிக்கும் தன்மை குறைகிறது. இதற்கு மாறாக புதிய காங்கிரீட் 40-50%வரை சூரிய ஒளியை பிரதிபலிக்கும், ஆனால் போக போக அதன் பிரதிபலிக்கும் திறன் குறைந்துவிடுகிறது. கீல் சாலையின் மேல் 2 இன்ச் அளவிற்கு காங்கிரீட் போட்டால் அது புதிய காங்கிரீட் தளங்களைப் போல் ஒளியை பிரதிபலிக்கும். ஒரே நேரத்தில் இந்த மூன்று விதமான சாலைகளின் வெப்பநிலையைக் கணக்கிட்டால் புது கீல் சாலை, பழைய கீல் சாலை, காங்கிரீட் மேலிட்ட கீல் சாலை முறையே 123 ,115, 88 டிகிரி ஃபாரன் ஹீட் வெப்பநிலையைக் கொண்டிருக்கும். மேற்கூரைகள் அவற்றின்

நிறத்தைப் பொறுத்து பூமியைக் குளிர்விக்கவோ, வெப்பப்படுத்தவோ செய்யும்.கருப்பு நிறத்தில் அடிக்கும் போது அதிக சூரிய ஒளியை உட்கிரகிக்கும்.வெள்ளை நிறத்தில் அடிக்கும் போது புதுப்பனியைப் போல் பெருமளவில் சூரிய ஒளியை பிரதிபலிக்கும். அறுவடை செய்த நிலத்தை உடனே உழுவதால் மண்ணின் கரிய நிறப்பரப்பு 20% அளவிற்கு சூரிய ஒளியை பிரதிபலிக்கிறது என்பதால் 1 டிகிரி அளவிற்கு வெப்பத்தை அதிகரிக்கும், ஆனால் அறுவடைக்குப் பின் உழாமல் பயிர்த்தாளை அப்படியே விட்டுவிட்டால் நிலத்தால் 30% அளவிற்கு சூரிய ஒளியை பிரதிபலிக்க முடியும். வெளிப்பரப்பின் நிறத்தின் அடர்தன்மை அதிகமாக அதிகமாக வெப்பமும் அதிகமாகிறது. புதிய நிலக்கீல்(Asphalt) 4% சூரிய ஒளியை மட்டுமே பிரதிபலிக்கிறது, புல்வெளி 25% சூரிய ஒளியை பிரதிபலிக்கும், புதுப்பனி 90% அளவிற்கு சூரிய ஒளியை பிரதிபலிக்கும்.வெளிர்நிறங்களைக் கொண்ட நிலப்பரப்புகளால் அதிக வெப்பத்தை 2-3 டிகிரி அளவிற்குக் தணிக்கமுடியும்.இதனால் மாறுவது புறப்பரப்பின் நிறம் மட்டுமல்ல அதன், பிரதிபலிப்புத் திறன் அதாவது அல்பீடோவும் மாறுகிறது. நியூயார்க் நகரத்தில் 7 மில்லியன் சதுர அடி அளவில் மேற்கூரைகளில் வெள்ளை நிறம் அடிக்கப்பட்டது.

உலகளவில் நகர்புறங்கள் பூமியின் நிலப்பரப்பில் ஒரு சதவீதம் உள்ளது. கூரைகளும், நடைபாதைகளும் நகரங்களில் முறையே 25%,35% அளவிற்கு காணப்படுகிறது.அவற்றை வெள்ளையடிப்பதன் மூலம் 44கிகா டன் கரியமில வாயுவை நீக்கும் அளவிற்கு பூமியைக் குளிரூட்ட முடியும். கூரை, நடைபாதைகளின் அல்பீடோவை மாற்றுவதன் மூலம் அடுத்த 11 ஆண்டுகளில் பசுங்குடில் வாயுக்கள் அதிகரிப்பால் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்பைத் தணிக்க முடையும்.

வெள்ளை நிற மேற்கூரைகள் வெப்பமயமாதலைத் தணிக்கும், கண்ணாடி போன்ற அதிக அளவில் ஒளியை எதிரொளிக்கக் கூடியத் தளங்களுடன் கூடிய கட்டமைப்புகளும் வெப்பமயமாதலை குறைக்கும்.ஐக்கிய அமெரிக்க நாடுகளில் ஒவ்வொரு ஆண்டும் பல மில்லியன் சதுர அடிக்கு குளிரூட்டும் கூரைகளாக வெண் சவ்வு கூரைகள் (White membrane roof) இடப்படும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதனால் அறை குளிரூட்டக் குறைந்த ஆற்றலே தேவைப்படுகிறது. 10 சதுர மீட்டர் அளவிலான கருப்பு வண்ணக் கூரைகளை வெண்மையாக்கும் பொழுது, 630 கிகி கரியமில வாயுவை வளிமண்டலத்திலிருந்து நீக்கும் அளவிற்கு பூமி குளிரூட்டப்படுகிறது.ஒரு சதுர கிலோமீட்டர் சாலையில் காங்கிரீட் இடுவதாலோ,

வெண்மைப்படுத்துவதாலோ 38 கிகி கரியமில வாயுவை ஆண்டு முழுவதும் நீக்குவதற்கு சமம். .இரண்டாவது வழிமுறையாக மேற்கூரைகளை வெள்ளையடிப்பதற்கு பதிலாக அதைப் பசுங்கூரைகளாக்குவது. அதாவது செடி கொடிகளை வளர்ப்பது, மாடித் தோட்டங்களை வளர்ப்பதன் மூலமாகவும் அதிக வெப்பத்தைத் தணிக்கமுடியும்.பசுங்கூரைகள் வெயில் காலத்தில் வெப்பத்தைத் தணிப்பதுடன் குளிர்காலத்தில் வீடுகளை வெம்மையாக்கவும் செய்கிறது. 2016ல் சான்ஃபிரான்சிஸ்கோ அரசு புதிதாகக் கட்டப்படும் கட்டிடங்களில் கட்டாயமாக பசுங்கூரைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற விதிமுறையைப் பிறப்பித்தது. மூன்றாவது வழிமுறையாக மேற்கூரைகளில் சோலார் பேனல்களைப் பொருத்துவதன் மூலம் நகரத்தின் வெப்பத்தை மட்டுப்படுத்தி. பகல் வெப்பத்தைக் குறைக்கமுடியும். இவை சூரிய ஒளியை உள்வாங்கி ஆற்றலை மின்சாரமாக்குவதால் இரட்டை பயன் அடையமுடியும். நகரெங்கும் சோலார் பேனல்களைப் பொருத்துவதன் மூலம் வெப்பநிலையை 1 டிகிரி குறைக்கமுடியும்.வெப்பம் குறைவதுடன் என சிட்னியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தெரிவிக்கிறது.பாலைவனங்களில் நிறுவப்பட்ட சோலார் மின் நிலையங்கள் மூலம் பகல் வெப்பத்தைக் குறைப்பதுடன், இரவில் பாலைவன மணல் பரப்புகள் வெப்பத்தை இழப்பதிலிருந்தும் பாதுகாக்க முடியும்.இதன் மூலம் புவியின் பிரதிபலிப்புத்திறனை அல்பீடோவை மாற்றுவதன் மூலமே புவி வெப்பமயமாதலை சரி செய்யமுடியும் எனக் கருதுவோமானால் அது சரியான தீர்வாகாது. புவியின் அல்பீடோ மதிப்பு மேகம், நீராவி,தூசுப்படலம், நிலப்பரப்பு, கடல், பனி ஆகிய பல்வேறு கூறுகளின் அளவைப் பொறுத்து அமைகிறது.புவியின் அல்பீடோவை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் மாற்றினால் அது புவியின் ஆற்றல் சமநிலையை மிகவும் பாதிக்கும்.இதனால் வெப்பநிலைக் குறைவதுடன் நீர் ஆவியாதலையும் குறைப்பதால், மேகங்கள் உருவாவதையும், மலைப்பொழிவையும் பாதிக்கும். மனித நடவடிக்கைகளால் அதிகரிக்கப்படும் பசுங்குடில் வாயுக்களால் ஏற்பட்டுள்ள புவி வெப்பமயமாதல் பல்வேறு பாதிப்புகளை உருவாக்கியுள்ளது. இவை அனைத்தையும் புவியின் அல்பீடோவை மாற்றுவதால் மட்டுமே சரி செய்ய இயலாது. அல்பீடோவை மாற்றிப் புவியைக் குளிர்வித்தாலும் காற்று மாசுபாடும், நீர், நில மாசுபாடும் சரியாகிவிடுவதில்லை.கடல் நீரில் ஏற்படும் அமிலமாக்கமும் குறையப்போவதில்லை. எனவே பசுங்குடில் வாயுக்களின் அளவைப் பெருமளவு குறைத்து, அதனுடன்அல்பீடோ மாற்றத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலமே புவிவெப்பமயமாக்கத்தால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்.

# தளபதி சுலைமானிக்கு வீரவணக்கம்

சமந்தா



வல்லரசு நாடுகள் ஈரானுடன் மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து2018 இல் டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு வெளியேறியது. ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது. மற்ற நாடுகளையும் ஈரானுடனான பொருளாதார உறவுகளை முறித்துக் கொள்ளுமாறு டிரம்ப் மிரட்டினார்.

நரேந்திர மோதி தன் மறுதேர்தல் பிரச்சாரத்திற்கு எப்படி புல்வாமா தாக்குதலைப் பயன்படுத்திக் கொண்டாரோ அது போல அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தன் மறுதேர்தல் பிரச்சாரத்திற்காக வெட்கக்கேடான முறையில் அரச பயங்கரவாதத்தை ஏவித் தளபதி சுலைமானியைக் கொல்ல உத்தரவிட்டுள்ளார். தனது நிர்வாகத்தின் கீழ் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்கான எல்லாக் கதவுகளையும் மூடியதுடன் ,ஈரானில் நிலவிய அமெரிக்க எதிர்ப்பின் மிதவாதப் போக்கையும் டிரம்ப் கொன்றுள்ளார்.

அமெரிக்க இராணுவத்தால் ஈரானின் மரியாதைக்குரிய முதன்மைத் தளபதி சுலைமானி படுகொலை செய்யப்பட்டிருப்பது வாஷிங்டனுக்கும் தெஹ்ரானுக்கும் இடையிலான உறவை மேலும் மோசமாக்கியுள்ளது. இது அமெரிக்கா - ஈரான் இடையிலான பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ள நிலையில் ,இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
ஐக்கிய அமெரிக்க அரசின் இரு அவைகளிலும் எந்தவொரு விவாதமுமின்றி ,காங்கிரசின் அதிகாரமும் இல்லாமல் டிரம்ப் இந்த முடிவை எடுத்தது அமெரிக்க உள்நாட்டுச் சூழலில் ஒரு சட்டவிரோதச் செயலாகும்." போரை நான் விரும்பவில்லை எனும் அவரது போர் எதிர்ப்புப் பசப்புரைகள் வெற்றுரைகளே என்பதற்கு இதற்கு மேல் வேறு சாட்சி தேவையில்லை. இது

இன்னொரு முறை ஐக்கிய அமெரிக்காவின் அப்பட்டமான அரச பயங்கரவாதத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

இந்தப் படுகொலை அமெரிக்க மக்களுக்கு எந்த வகையிலும் நலன் பயக்காது .மாறாக அவர்களது அமைதியான வாழ்விற்குத் தொடர் அச்சுறுத்தலாகவே அமையும். அமெரிக்க அரசின் வெளியுறவுக் கொள்கையும் ,வெளிநாட்டு நடவடிக்கைகளும் அந்நாட்டு மக்களைப் பாதுகாப்பற்ற சூழலுக்குத் தள்ளியுள்ளன.

ஜனவரி3 ஆம் தேதி மேற்காசிய நாடான இராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் ,அமெரிக்கப் படைகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ,ஈரானின் புரட்சிப் பாதுகாப்புப் படையின் குத்ஸ் படைப்பிரிவுத் தளபதி குவாசிம் சுலைமானி ,இராக்கின் இராணுவத் தளபதி அபு மஹ்தி அல் முகந்திஸ் உள்ளிட்ட ஏழு பேர் கொல்லப்பட்டனர். சுலைமானி ,அபு மஹ்தி அல் முகந்திஸ் இருவருமே ஐ.எஸ்.ஐ.எல்லுக்கு எதிரான போரில் முக்கியப் பங்காற்றியவர்கள்.

சுலைமானி இறந்த செய்தியைத் தொடர்ந்து டிரம்ப் அமெரிக்கக் கொடியின் படத்தை சமூக ஊடகங்களில் வெளியிட்டதன் மூலம் வல்லாதிக்கத்தின் அடிப்படையிலேயே ஐக்கிய அமெரிக்க தேசியம் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பால் உணர்த்தியுள்ளார். முதல் உலகப் போருக்குப் பின் தன் மேலாதிக்கத்தை நிலைநாட்டிய யு.எஸ்.ஏ .அரசு உலகெங்கும் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்தே தன் கொடியைப் பறக்க விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

சுலைமானிக்கு மரியாதை செலுத்தும் விதமாக ஈரானில் மூன்று நாள் துக்கம் அனுசரிக்கப்பட்ட பின் நல்லடக்கம் செய்யப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். துக்கத்தில் தலைநகர் டெஹ்ரானே` கருநிறமாக மாறியது.

**யார் இந்த சுலைமானி?**

தளபதி குவாசிம் சுலைமானி ( (62ஈரானின்2 ஆவது சக்தி வாய்ந்த தலைவராகக் அறியப்பட்டவர். 1979இல் ஈரானியப் புரட்சியின் போதே ,ஈரானின் இஸ்லாமிய புரட்சிப் படைப் பிரிவில் இணைந்து மேற்கு அஸெர்பைஜன் பிராந்தியத்தில் போரிட்டார். ஈரான்-இராக் போரின் பொழுது இராக் எல்லையில் அவரின் போர்த் தந்திரத்தால் தேசிய வீரராக உருவெடுத்தார்.

1979இல் ஏற்படுத்தப்பட்ட இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படை 40 ஆண்டுகளாக .ஈரானின் அரசியல் ,ராணுவம் ,பொருளாதரம் அனைத்திலும் தாக்கம் ஏற்படுத்தும் ஒர் அமைப்பு ஈரானின் அரசியலமைப்பை வெளிநாடுகளின் தலையீடு மற்றும் சதித் திட்டங்களிலிருந்து பாதுகாப்பதே

புரட்சிகரக் காவலர்களின் முக்கியப் பணியாகும். இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரம் பெற்றது குத்ஸ் படை. ஈரானின் வெளிநாட்டு இராணுவ நடவடிக்கைகளுக்கு குத்ஸ் படை பொறுப்பேற்கும். சுலைமானி1998 ஆம் ஆண்டு முதல் குத்ஸ் படைக்குத் தலைமைப் பொறுப்பேற்றார். 29 ஆண்டுகளாக ஈரானிய இராணுவத்தின் வெளியுறவுக் கொள்கையின் முகமாக அறியப்படும் சுலைமானி ,ஈரானில் ஐ.எஸ் .பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போரிடுவதற்கான உத்திகளை வடிவமைத்துக் கொடுத்தார். அவரது தலைமையில் குத்ஸ் படையின் ஆற்றல் விரிவடைந்து வலுப்பெற்றது.

**யு.எஸ். படையெடுப்பு மற்றும் இராக் ஆக்கிரமிப்பு (:(2010-2003**

2005 இராக்கில் சதாம் ஹுசைனின் வீழ்ச்சிக்கு பின் முன்னாள் பிரதமர் இப்ராஹிம் அல் ஜா ஃப்ரி மற்றும் நௌரி அல் மலிகி தலைமையில் மீண்டும் அரசு நிர்மானிக்கப்பட்ட பொழுது , இராக்கிலும் சுலைமானியின் செல்வாக்கு பரவியது.

அந்தக் காலகட்டத்தில் ஷியா அரசியல் கட்சியும் ,துணை இராணுவப் படையுமான பதர் அமைப்பு அரசின் பாதுகாப்புப் படையானது. ஐ.எஸ்.ஐ.எல்லுக்கு எதிரான இராக்கியப் போரில் சுலைமானியின் கட்டுப்பாட்டில் இருந்த ஷியா இராணுவத் துணைப்படைகள் இராக்கிய இராணுவத்துடன் இணைந்து தீவிரவாதிகளோடு திறனுடன் போரிட்டன. யு.எஸ். ஆயுதப்படைகள் மற்றும் அவர்களது கூட்டாளிகள் இராக்கில் சமாளிக்க வேண்டிய மிகவும் வெறுப்பூட்டும் நபர்களில் ஒருவராக கஸ்ஸெம் சுலைமானி இருந்தார். யு.எஸ். படையெடுப்பு மற்றும் ஆக்கிரமிப்பின் போது ,ஐ.ஆர்.ஜி.சி .தளபதி ஷியா தலைமையிலான குழுக்களுடன் இணைந்து இராக்கில் யு.எஸ்ஸின் அதிகாரத்தை வலிமையிழக்கச் செய்தார். லெபனானின் ஹெஸ்புல்லா ,மற்றும் இராக்கின் ஷியா இராணுவப் படைகளுடன் தொடர்பை ஏற்படுத்தி வலுப்படுத்தினார்.

**2006 லெபனான் போர்:**

குத்ஸ் படையின் தளபதியாக ,சுலைமானியின் முதற்பெரும் பணிகளில் ஒன்று2006 ,இல் இஸ்ரேலுக்கு எதிரான போரில் ஹெஸ்பொல்லாவுக்கு உதவியதாகும். ஹெஸ்பொல்லா படை தனது போர்த்திறனால் இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகளை (ஐ.டி.எ ஃப்) திகைப்புக்கு ஆளாக்கித் தோற்கடித்தது.

ஹெஸ்பொல்லாவின் பொதுச்செயலாளர் ஹசன் நஸ்ரல்லா மற்றும் அவர்களது அப்போதைய இராணுவத் தளபதி இமாத் மௌக்னியே ஆகியோருடன் நேரடியாகப் பணியாற்றியதால் , சுலைமானி போர் முடிவுறும் வரை லெபனானில் இருந்தார்.

**சிரியப் போர்:**

2011இல் சிரியாவில் உள்நாட்டுப் போர் வெடித்த போது சுலைமானி இராக்கில் உள்ள தங்களின் இராணுவப்படைகளை அஸாத் அரசைப் பாதுகாக்கச் செல்லுமாறு கட்டளையிட்டார். சிரிய அதிபர் அல்-அஸாத் தோல்வியுறும் நிலைக்குத் தள்ளப்பட்ட போது அவருக்கு ஆதரவு பெற்றுத் தந்தார். ஐ.எஸ் .பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் சிரிய அரசுப் படைகளுக்கு உதவினார். சிரிய மோதலில் போர்த் திட்டங்களை வகுத்துக் கொடுத்து ,ஹெஸ்பொல்லா மற்றும் இராக் துணை இராணுவப் படைகள் போன்ற நட்புப் படைகளை அணிதிரட்டி ,முனைமுகத்தே நிறுத்தப்பட்ட துருப்புகளைப் பார்வையிட்டு ,சுலைமானி அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பங்காற்றினார்.

சிரியாவில் போர் முடிவடைந்தவுடன் ,ஈரானியத் தளபதி மீண்டும் இராக் சென்றார் 2020 .ஜனவரி 3 அன்று படுகொலை செய்யப்படும் வரை இராக்கில்தான் இருந்துள்ளார்.

குத்ஸ் படையைப் பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்தது. சுலைமானி மீது பொருளாதாரத் தடைகள் விதித்தது. ஹெஸ்பொல்லா போன்ற ஷியா துணை இராணுவ குழுக்களுக்கு அதிகாரம் அளித்ததன் மூலம் இஸ்ரேலின் பாதுகாப்பை அச்சுறுத்த முயன்றதாக சுலைமானி மீது யு.எஸ் குற்றம் சாட்டியது.

சௌதி அரேபியா ,இஸ்ரேல் ,ஐக்கிய அமெரிக்க நாடுகள் அடக்க நினைத்த ஈரானின் வலிமையைத் தக்கவைத்து மத்தியக் கிழக்கு நாடுகளில் ஈரானின் நன்மதிப்பை உயர்த்துவதில் முக்கியப் பங்கு வகித்தார் சுலைமானி.

அமெரிக்க ,இஸ்ரேல் ,அரேபிய நாடுகள் சுலைமானியைப் பகைவனாகவே கருதின.பல ஆண்டுகளாக கஸ்ஸெம் சுலைமானி ஐக்கிய அமெரிக்காவிற்கு ஒரு முள்ளாகவே தெரிந்தார். தொடர்ந்து மத்திய கிழக்கில் அமெரிக்க அரசின் மேலாதிக்கத்தை வலுவிழக்கச் செய்தார் .

ஐக்கிய அரபு நாடுகள் ஈரானுடன் வலுவான வணிகப் பொருளாதார உறவுகளைக் கொண்டிருந்த போதும் ,வளைகுடா பகுதியில் ஈரானின் அரசியல் கொள்கைகளை எதிர்க்குமாறு ஆண்டுக்கணக்கில் இராக்குடன் இணைந்து அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுத்தன .சௌதி அரேபியா ஈரானுடன் எந்த உறவிலும் இல்லாத போதும் ஈரானின் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரமாக எதிர்க்குமாறு ஐக்கிய அமெரிக்க அரசின் கொள்கையாளர்களை வலியுறுத்தியுள்ளது. இஸ்ரேல் ,மேற்கத்திய நாடுகள் ,அரேபிய நாடுகள் சுலைமானியை அச்சுறுத்தலாகக் கருதி அவர்

மீது பல கொலை முயற்சிகளை மேற்கொண்டன. பல சமயங்களில் அவர் கொல்லப்பட்டதாகப் பொய்ச் செய்திகளும் பரப்பப்பட்டன. இவரைக் கொல்ல 20 வருடங்களாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன ,இந்த அக்டோபரில் கூட டெஹ்ரானில் அவரைக் கொல்வதற்கான சதிதிட்டம் முறியடிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் இராணுவப் படைகளை வலுப்படுத்தியதிலும் ,மத்தியக் கிழக்கு நாடுகளில் ஈரானின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தியதிலும் சுலைமானிக்கு முக்கியப் பங்குண்டு. அமெரிக்காவின் ஈரான் எதிர்ப்பு முயற்சிகளைக் கள்ளத்தனமாக மேற்கொண்ட ஐ.எஸ்.ஐ.எல்லைத் தோற்கடிக்க உதவிய சுலைமானியின் போர்த்தந்திரம் ஈரானின் பாதுகாப்பிற்கு இன்றியமையாததாக அமைந்த நிலையில் அவரைப் படுகொலை செய்தது ஈரானின் தேசிய பாதுகாப்பைப் குறிவைத்துத் தாக்கும் அச்சுறுத்தலாக அமைகிறது .

ஐக்கிய அமெரிக்க நாடுகளின். ஆயுதப் படைகள் மற்றும் அவர்களது கூட்டணிக்கு எதிரான பல நடவடிக்கைகளின் சூத்திரதாரியான சுலைமானி தனது போர்க்களத் துணிச்சலாலும் ,திறன்மிகு போர்த்தந்திர நடவடிக்கைகளாலும் என்றென்றும் நினைவுகூரப்படுவதுடன் வழிகாட்டியாகவும் இருப்பார். மேரிலாந்து பல்கலைக்கழகத்தின் சர்வதேசப் பாதுகாப்பு ஆய்வு மையத்தால்2019 ல் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில் ஈரானில் 82 சதவீதத்தினர் சுலைமானியை ஆதரிப்பவர்களாக இருப்பது தெரியவந்துள்ளது.

சுலைமானியின் கொலைக்கெதிராக ஒலித்த கண்டனக் குரல்களைக் கேளுங்கள் :

ஈரானிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜவத் ஷரிஃப் இந்தக் கொலையை அமெரிக்க அரசின் பயங்கரவாதம் எனக் கண்டித்தார் .சுலைமானியின் தூய இரத்தம் எதிர்ப்பு எனும் மரத்தை வலுப்படுத்தும் என்றும் ,ஈரானிய மக்களை ஒன்றுபடுத்தி இப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கொள்கைகளை வலுவிழக்க செய்யும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அல் நுஸ்ரா ,அல் கொய்தா ,ஐ.எஸ்.ஐ.எஸ் மற்றும் பலரை எதிர்த்துப் போரிடும் மிகச் சிறந்த சக்தியாகத் திகழ்ந்த தளபதி சுலைமானியைக் குறிவைத்துப் படுகொலை செய்த அமெரிக்காவின் சர்வதேச பயங்கரவாதச் செயல் மிகவும் ஆபத்தான ,முட்டாள்தனமான விரிவாக்கம் ஆகும். இந்த முரட்டு சாகசவாதத்தின் எல்லா விளைவுகளுக்கும் ஐக்கிய அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் பிரதமர் ரவ்ஹனியின் முதன்மை ஆலோசகர் ஹெசமொதின் ஆஷ்னா அவர்கள் , சுலைமானிக்குப் பிறகு இப்பகுதியின் அரசியல் ,பாதுகாப்பு ,இராணுவத்தின் சிவப்பு எல்லைக் கோடும் மாறிவிடும். கோபுரங்கள் ,மாளிகைகள் ,சாலைகளைக் காட்டிலும் பாலைவனங்களும் ,

மலைகளும் ,பள்ளத்தாக்குகளும் சுலைமானியை நன்கு அறியும் எனத் தெரிவித்துள்ளார்.

“ஐ.எஸ்.ஐ.எல்லை வீழ்த்திய இராக் போரில் சுலைமானி வகித்த பங்கினால் ஈரான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் அவர் தியாகியாகவும் தேசிய வீரராகவும் போற்றப்பட்டார். அவர் போன்ற திறன் படைத்தோர் இல்லாதிருப்பின் அந்தப் பகுதியெங்கும் கறுப்புக் கொடிகளே ஏற்றப்பட்டிருக்கும் “என்று டெஹ்ரான் பல்கலைக்கழக அமெரிக்க ஆய்வுத்துறையின் தலைவர் மொஹமது மரண்டி தெரிவித்துள்ளார்.

மேற்கத்திய ஊடகங்கள் சித்திரிப்பது போல் அவர் நிழல் மனிதரல்ல ;நேர்மாறாக ,ஈரானால் நேசிக்கப்படுபவர் ,பொதுமக்களால் நன்கு அறியப்பட்டவர் ,தேசத்தின் முக்கியமான பல்வேறு தருணங்களில் பொதுமேடைகளில் பல்வேறு உரைகளை ஆற்றியுள்ளார் என்கிறார் மரண்டி.

இந்தக் கொலை ஈரான் மீதும் இராக் மீதும் தொடுக்கப்பட்ட போர் ;இதற்காக யு.எஸ் வருந்தும் நிலை ஏற்படும் ;இக்கொலை மத்தியக் கிழக்கில் ஈரானின் அரசியல் ,இராணுவ நடவடிக்கைகளில் ஒரு புது அத்தியாயத்தை உருவாக்கும் ;அயலுறவுக் கொள்கைகளில் இந்தக் கொலைச் சம்பவத்தால் எந்தப் பின்னடைவும் வராது என்றும் மரண்டி தெரிவுத்துள்ளார்.

இராக்கின் பாதுகாவலர் ,பிரதமர் அடெல் அப்துல் மஹ்தி இக்கொலையை இராக்கில் மோசமான போரைத் தூண்டிவிடும் வன்முறை எனக் கண்டனம் தெரிவித்துள்ளார். இது இராக் நாட்டின் மீதும் ,மக்கள் மீதுமான தாக்குதல்.இராக்கிய முன்னணியினருக்கு எதிராகவோ அல்லது சகோதர நாட்டினருக்கு எதிராகவோ இராக்கிய மண்ணில் கொலை நடவடிக்கைகளை மேற்கொள்வது இராக்கின் இறையாண்மையை அப்பட்டமாக மீறுவதும் இராக்கிலும் இந்தப் பிராந்தியத்திலும் உலகிலும் ஓர் அழிவுப் போரைத் தூண்டும் ஆபத்தான விரிவாக்கம் ஆகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிரியா வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரி" இந்தக் கோழைத்தனமான அமெரிக்க ஆக்கிரமிப்பு. எதிர்ப்பின் தியாகத் தலைவர்களின் பாதையில் பின்தொடர்வதற்கான உறுதியை வலுப்படுத்தும் என்பதில் சிரியா உறுதியாக உள்ளது "என்று குறிப்பிட்டுள்ளார்.

ஹெஸ்புலா தலைவர் சயது நஸ்ரல்லா ,இந்தக் கொலையாளிகளுக்குத் தக்க தண்டனை பெற்றுத் தருவது உலகெங்குமுள்ள எதிர்ப்புப் படைவீரர்களின் பொறுப்பும் கடமையுமாகும் எனத் தெரிவித்துள்ளார். சுலைமானியுடன் இதுவரை இருந்தவர்கள் இரவு பகல் பாராது அவர் காலடிகளைப் பின்பற்றி அவரது இலட்சியங்களை அடைவர் என சூளுரைத்துள்ளார்.

முற்றுகையிடப்பட்ட காசா பகுதியை நிர்வகிக்கும் பாலஸ்தீனிய ஹமாஸ் குழு ஒரு அறிக்கையை வெளியிட்டது ,அதில்" பாலஸ்தீனத்தின் எதிர்ப்பை ஆதரிப்பதில் முக்கியப் பங்கு

வகித்த முன்னணி ஈரானிய இராணுவ அதிகாரிகளில் சுலைமானியும் ஒருவர்." இஸ்ரேலிய எதிரிக்குச் சேவை செய்யப் பிராந்தியத்தில் பதட்டங்களை விதைக்கும் தொடர்ச்சியான இந்த அமெரிக்கக் குற்றங்களை நாங்கள் கண்டிக்கிறோம் "என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது பாலத்தீன இஸ்லாமிய ஜிகாத் குழு அபு மஹ்தி அல்- முகந்திஸ் மறைவுக்காக இராக்கிய மக்களுக்கு இரங்கல் தெரிவித்தது. அமெரிக்க ஆக்கிரமிப்பிலிருந்தான இராக்கிய விடுதலையின் அடையாளச் சின்னங்களில் ஒருவர் என்று அவரைப் போற்றியது. "என்றும் அமெரிக்க மேலாதிக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் பணியாத இந்த இராக் எப்போதும் தன் போர்வீரர்களுடன் அரபுத்தன்மையுடனே இருந்து வரும். இந்த இராக்கே ஆக்கிரமிக்கப்பட்ட இராக்கை விடவும் பெரிது.

சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யி ,ஐக்கிய அமெரிக்கா அதிகாரங்களைத் தவறாக பயன்படுத்தக் கூடாது ,பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். ஐக்கிய அமெரிக்காவின் அபாய ராணுவ நடவடிக்கை அடிப்படையான சர்வதேச உறவுகளுக்கான நியதிகளை மீறுவதாகவும் பிராந்தியத்தில் இறுக்கத்தையும் , கொந்தளிப்பையும் அதிகப்படுத்தியுள்ளது எனவும் கூறியுள்ளார் .

இக்கொலை அமெரிக்கர்கள் மத்தியிலேயே அதிர்ச்சியையும் ,கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.டிரம்பின் அபாயகரமான போரைத் தூண்டிவிடும் நடவடிக்கைகளுக்கு எதிராக அமைதியின் பெயரில் அமெரிக்க மக்கள் ஒன்றுபட்டுள்ள நிலையில் இது டிரம்பின் வீழ்ச்சிக்கே வழியமைக்கும்.

உலகை உலுக்கிய தளபதி சுலைமானியின் இழப்பு இதுவரை உலகெங்கும் காணப்படும் அமெரிக்க மேலாதிக்கத்தின் மீதான சகிப்புத் தன்மைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்பில் ஒரு புதிய திருப்புமுனையாக அமையட்டும். மக்கள் தளபதி சுலைமானிக்கு வீர வணக்கம் செலுத்தி அமெரிக்க வல்லாதிக்கத்திற்கு எதிரான ஜனநாயக சக்திகளை வளர்த்தோங்கச் செய்வோம்.

## நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில்… (3)

சமந்தா

**தலைப்பு: காலனியாதிக்கத்தின் மூன்று மோதல்கள்:**

**ஆசிரியர்:பிரபிர் புர்கயஸ்தா**

**டொர்டெசிலாஸ்-ஒப்பந்தம்:**




15ஆம் நூற்றாண்டில் கொண்டுவரப்பட்ட டொர்டெசிலாஸ் ஒப்பந்தத்தில், பூமியின் குறுக்கே ஒரு கோட்டைப் போட்டு இந்தக் கோட்டிற்கு கிழக்கில் உள்ள பூமியின் எல்லா நிலங்களும் போர்த்துக்கீசியரை சேரும். கோட்டிற்கு மேற்கே உள்ள எல்லா நிலங்களும் ஸ்பானியர்களைச் சேரும் என போப் கூறியுள்ளார் .மற்ற மக்களுக்கு சொந்தமான நிலங்களை எப்படி பிறருடையதாக மாற்ற முடியும். ஏனெனில் அவை சரி நிகரான அரச ராஜ்ஜியங்களாக இருந்தது.அதை எப்படி போர்த்துக்கீசியருக்கும், ஸ்பானியர்களுக்கும் ஒதுக்க முடியும்,.எப்படி அதை செய்ய முடியும் அதற்கு தேவாலயம் ஒரு எளிதான விளக்கம் தந்தது.அவர்கள் கிறித்தவர்கள் இல்லையெனில் தேவாலயத்தின் பெயராலும் அரசர்களது பெயராலும் நிலத்தை எடுத்துக்கொள்ளமுடியும், .அதாவது கிறித்தவத்தைத் தவிர வேறு எந்த மதக்குழுக்களுக்கும் நிலத்தில் உரிமை இல்லை அரசராகும் உரிமை இல்லை என்பதையே இது குறிக்கிறது .உண்மையில் அவை திறந்தவெளி பொது நிலங்களாக இருந்தன.யார் வேண்டுமானாலும் சென்று நிலத்தை பெறலாம், என்றவாறே அமைந்திருந்தன.கொலம்பஸ், வாஸ்கோடகாமா போன்ற பெரிய கடல் பயணிகள் இரண்டு விதத்தில் அவற்றை ஆக்கிரமிப்பு செய்யத் திட்டமிட்டனர்.எங்கு சென்றாலும் ஒன்று தேவாலயத்தின் பெயராலோ, சிலுவையின் பெயரிலோ, மற்றொன்று அரசன் அல்லது அரசியின் பெயரிலோ அவற்றை அபகரிப்பது, இந்த

நிலங்கள் அனைத்தையும் ராணுவப் படைபலமிருந்தால் தேவாலயத்தின் பெயராலோ, அரசன் அரசியின் பெயரிலோ இவற்றை அபகரிக்கமுடியும் என்றே கருதினார்கள். பிரச்சினை என்னவென்றால் சில நேரங்களில் அதை செயல்படுத்த முடியவில்லை. , வட, தென் அமெரிக்கா, யுரேசியாவின் பெரிய பரப்பானஆப்பிரிக்கா, மற்றும் ஆசியா இந்த மூன்று கண்டங்களுடனான மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மோதலைப் பார்த்தோமானால், இந்த மூன்று கண்டங்களும் வேறு வேறு காலனியாதிக்க வரலாற்றைக் கொண்டிருந்தன.அந்தக் காலனியாதிக்க வரலாற்றை தான் இப்பொழுது பார்க்கப்போகிறோம்.இந்தக் கண்டங்களுக்கு ஏற்பட்ட காலனியாதிக்க மோதல்கள் ஒரே மாதிரியானவை, அல்ல.வேறுபட்டவையாக இருந்தன.ஆப்பிரிக்காவில் நேர்ந்ததோ, லத்தீன் அமெரிக்காவுக்கு நேர்ந்ததோ ஆசியாவுக்கு நேர வில்லை.ஆசியாவில் அவர்கள் கருணை காட்டினார்கள் என்று சொல்லவரவில்லை.ஆசியா ஏற்கெனவே அதிகம மக்கள் அடர்த்தியும், பொருளாதார த்தையும் கொண்டிருந்தது.அங்கே ஐரோப்பாவிற்கு மதிப்புமிக்கதாகக் கருதப்படும் அரியப் பொருட்களை உற்பத்தி செய்யப்பட்டதால் அவர்கள் ஆசியாவுடன் அதிகம் வணிகம் செய்வதையும் அதைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதையுமே விரும்பினர்.ஆனால் ஆப்பிரிக்காவிலோ, லத்தின் அமெரிக்காவிலோ அவர்களது அணுகுமுறைகள் மிகவும் வேறாக இருந்தது போர்த்துக்கீசியர், ஸ்பானியரின் கப்பல் வலிமை அதிகமாக இருந்த 16,17ஆம் நூற்றாண்டில் ஸ்பானியர்கள் உண்மையில் திருட்டு,கொள்ளையடிப்பதையே விரும்பியதால் போர்க்கப்பலில் படையுடன் தங்கம், வெள்ளியைக் கொள்ளையடிக்க அமெரிக்காவிற்கு சென்றனர்.மெக்சிகோவிலிருந்து, மத்திய அமெரிக்கா வரை சென்று இன்கா இனத்தவரின் நிலத்திற்கும், மெக்சிகோவின் அஸ்டெக்குகளின் நிலத்தையும் கோரினர்.உண்மையிலே சித்திரவதையாளர்களாக இருந்தனர்.கிறிஸ்டோபர் கொலம்பஸின் கப்பலில் சென்ற பாதிரியார் கொலம்பஸ் என்ன செய்தார் என்று தந்தக் குறிப்பை படித்தால் வயிற்றைக் கலங்கச் செய்யும். கொலம்பஸும், ஸ்பானியர்களும் அங்குள்ள குழந்தைகளையும், இளம்பெண்களையும் சிறைபடுத்தி தாய்லாந்துவாசிகளிடம், தங்கத்தையும், வெள்ளியையும் கொண்டு வாருங்கள் இல்லையேல் உங்கள் குழந்தைகள் உங்களுக்கு ஒருபோதும் கிடைக்கமாட்டார்கள் என்றனர்.குழந்தை வன்புணர்வாளர்களாக அவர்களை நாசம் செய்தனர். அவர்களை ஸ்பெயினுக்கு அடிமைகளாக அழைத்துச் சென்றனர்.இது போன்ற பயங்கரமான கொடுமைகளையே கொலம்பஸ் செய்துள்ளார்.இவை அனைத்தையும் அரசியின் பெயரிலே செய்தார்.அவர்கள் கண்டுபிடிக்கும் புதிய பகுதிகளில் அதற்கான அதிகாரத்தையும் அரசி அளித்திருந்தார்.200 ஆண்டுகளாக

ஸ்பானியர்களும், போர்த்துக்கீசியரும் செய்த அட்டூழியங்கள் வரலாற்றில் பதிவுசெய்யப்படவில்லை. அதனால் தான் கொலம்பஸ் தினம் கடைபிடிக்கப்படுவதற்கு எதிராக பலக் குழுக்கள் போராடின.கொலம்பஸ் இவை அனைத்தையும் அரசியின் அங்கீகாரம் பெற்று மேற்குடியினராக உயருவதற்கே செய்தார். இன்கா பேரரசில் பெருமளவு தங்கம் இருந்தது.ஸ்பானியர்கள் இன்கா மக்களை கொடும் அடக்குமுறைக்கு உட்படுத்தினர்.ஆக திருட்டும், கொள்ளையடிப்பதுமே ஸ்பானிய வரலாறாக இருந்தது. போர்த்துக்கீசியருக்கு ஒரு பிரச்சினை இருந்தது.அவர்களால் அஸ்டெக், இன்கா பேரரசுகள் உள்ள மத்திய அமெரிக்காவை அடைய முடியவில்லை.போர்த்துக்கீசியர்கள் இப்போதுள்ள பிரேசில் பகுதிக்கு சென்றனர்.அதனால் தான் பிரேசில் போர்த்துக்கிசிய நாடானது.அங்கிருந்து ஆக்கிரமிப்பை விரிவாக்கம் செய்தனர் இருந்தபோதும் ஸ்பானியர்களுக்கு ஈடாக அவர்களால் கொள்ளையடிக்க முடியவில்லை. அதனால் அவர்கள் ஆப்பிரிக்காவின் மேற்குக் கரைக்கு சென்றார்கள்.அடிமை வணிகமே அவர்களது முக்கிய வணிகமானது.அவர்கள் ஆப்பிரிக்கர்களைப் பிடித்து அடிமையாக்கி பிரேசிலுக்கும், சர்க்கரைக்காக மேற்கு இந்தியத்தீவுகளுக்கும் மற்ற பகுதிகளுக்கும் விற்றனர். ஆப்பிரிக்க அடிமைகளைக் கொண்டு அடிமை வணிகத்தை உருவாக்கியவர்கள் போர்த்துக்கீசியர்கள் என்பதே போர்த்துக்கீசியர்களின் முக்கியமான வரலாறு. ஆப்பிரிக்காவில் பேரரசுகள் இருந்தன.அங்கிருந்த நிலங்களை ஆக்கிரமித்தார்கள்.பெருமளவில் கடலோர நகரங்கள் பின்னர் பிரெஞ்சுக்காரர்களால் போர்த்துக்கீசியரிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்டது.அனைத்தும் முக்கியமாக அடிமை வணிகத்துடன் ஆரம்பித்தது. அதனால் ஆப்பிரிக்கா, லத்தின் அமெரிக்கா அல்லது அமெரிக்கா இரண்டு கண்டங்களிலும் கொள்ளை, நடந்தது.அதனுடன் அடிமை வணிகமும் நடந்தது.இன அழிப்பும் செய்யப்பட்டது.பெருமளவில் அமெரிக்காவில் இனஅழிப்பு ஸ்பானியர்களாலும்,சில பகுதிகளில் போர்த்துக்கீசியர்களாலும், ஆப்பிரிக்காவிலும் பெரிய அளவில் கொலைகளும் அடிமையாக்கமும் செய்யப்பட்டது.இன அழிப்பு, கொள்ளை, அடிமைமுறையின் மூலமே ஐரோப்பா அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் போர்த்துக்கீஸ் ஆப்பிரிக்காவிலும் தாக்குதல் நடத்தியுள்ளது. மேற்கின் வளர்ச்சியின் வரலாறு என்றழைக்கப்படுவது மேற்கிந்தியத்தீவுகளில் கரும்பு பயிர் செய்யவும், பிறகு பிரேசிலிலும், அதன் பின் தென் ஐக்கிய அமெரிக்காவில் பருத்தி பயிர்செய்ய மேற்கொண்ட அடிமைமுறைகளின் வரலாறே.இவை தொழிற் புரட்சிக்கு முன்னரே நடந்தது என்பது நினைவிலிருக்கட்டும்.இதே காலகட்டத்தில் ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது. மறுமலர்ச்சிக்கிப் பின் தொழிற்புரட்சி ஏற்பட்டது. கொள்ளை,

அடிமைமுறை, இன அழிப்புடன் மேற்கில் மறுமலர்ச்சி உதித்துள்ளது. மறுமலர்ச்சி ஒரு மோசடி என்று இங்கேக் கூறவரவில்லை.அது மதிப்புக்குரியவைகளை முன் கொண்டு வந்தது உண்மை தான்.ஆனால் இங்கு கூறவருவது இரண்டு முற்றிலும் முரண்பாடான விசயங்களை தனித்தனியாகப் பார்க்கும் மனித மூளையின் சிந்தனைக் கோளங்களை குறிப்பிடுகிறன். உதாரணமாக நீங்கள் சிறந்த அறுவை சிகிச்சையாளராக இருக்கலாம் ஆனால் நெற்றியைத் தொட்டு சுழி போட்டுத் தான் கத்தியால் கீறல் ஏற்படுத்துவீர்கள் என்றால், அது நீங்கள் நல்ல சிகிச்சையாளராய் இருப்பதைத் தடுப்பதில்லை தான், இருப்பினும் நீங்கள் சிகிச்சையையும் மேற்கொண்டு கடவுளையும் கூப்பிடுகிறீர்கள்.உங்களுக்கு இயற்பியல் தெரியும்,எதனால் கிரகணம் வருகிறது என்பதும் தெரியும்.இருப்பினும் கிரகணத்தன்று சாப்பிடமாட்டீர்கள். எல்லோருமல்ல என்றாலும் நம்மில் பலரும் இது போன்ற முரண்பாடுகளை, சிந்தனா முரண்பாடுகளைக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு நாகரிகமே முரண்பாடுகளைக் கொண்டிருப்பது என்பது முற்றிலும் வேறான ஒன்று. இந்தியாவில் வலதுசாரிகள் இந்து மதமே அனைத்திலும் சிறந்த மதம், இந்துக்கள் மிகவும் கருணையான மக்கள், என்றும் கூறுகிறார்கள்.அதோடு மாட்டுக்கறி சாப்பிடுபவர்களை கும்பல் கொலை செய்வதும் ஏற்புடையதே என்பது போல் வாடிகன் என்ற கருத்தாக்கம் இல்லாமலே பல புனைவுகளை ஏற்படுத்துகிறார்கள். பெரும்பாலானவர்களுக்கு இந்த முரண்பாடுகளின் இரண்டு பக்கமும் தெரிந்திருந்தும் அதைப் பிரச்சினையாகக் கருதுவதில்லை.இங்கு நான் கூறுவது கோட்பாட்டுத் தத்துவங்களில் வளர்ச்சியடைந்த அதே நாடுகள் தங்கள் காலனிகளில் பல பயங்கரமான கொடுமைகளை நிகழ்த்தியுள்ளன. அடிமை வர்த்தகத்தால் ஆப்பிரிக்கா அழிக்கப்பட்டதைக் காண்கிறோம்.10 மில்லியன் ஆப்பிரிக்க அடிமைகள் அமெரிக்காவுக்கு அடிமைக் கப்பல்களில் கொண்டுவரப்பட்டார்கள்.அதில் 20 சதவீதத்தினர் வழியிலே இறந்துவிட்டனர்.அது ஆப்பிரிக்காவின் நாகரிகக் கட்டமைப்பின் அடிப்படையை அழித்தது.அது அவர்களது நகரங்களை அழித்தது அதனால் எண்ணிலடங்காதோர் இறந்தனர்.அந்த இனக்குழுக்களுக்குள்ளே பகையை ஏற்படுத்தியது.அடிமைகளைப் பிடிக்கும் முறை அங்கே கடலோரப் பகுதிகளில் விவசாயத்தை அழித்தது.ஆப்பிரிக்காவின் பொருளாதாரமே அழிந்தது.இதனால் ஏற்பட்ட அழிமானம் எந்த அளவிற்கு இருந்தது எனப் பார்த்தோமானால் 16ஆம் நூற்றாண்டில் 600மில்லியனாக இருந்த அவர்களது மக்கள்தொகை 1930ல் வெறும் 200 மில்லியன் அளவிற்கு குறைந்தது.400 ஆண்டுகளில் நம்பமுடியாத அளவில்அதன் மக்கள்தொகையே குலைந்துபோனது.இது அடிமைமுறையால் வந்த அழிமானத்தைக் காட்டிலும் அதீதமாய் தெரிகிறது.ஆசியாவிலோ,

ஐரோப்பாவிலோ இந்த அளவிற்கு மக்கள்தொகை குறையவில்லை. காங்கோவைப் பற்றி.கிங்க் நியோபோல்ட் பேய் என்ற புத்தகத்தில் பெல்ஜியர்கள் அந்தக்காலகட்டத்தில் நியோபோல்ட் ஆட்சியில் என்ன செய்தார்கள் என்பதைக் விவரிக்கிறது.பெல்ஜிய அரசாட்சியில் லியோபோல்ட் II காங்கோவில் ஒரு கொள்ளை ஆட்சி நடத்தினார்.10 மில்லியன் மக்கள் இறந்தனர். அவர்கள் காட்டுமரங்களிலிருந்து ரப்பர் எடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தினமும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ரப்பர் எடுக்கவேண்டும் என நிர்ணயிக்கப்பட்ட து .அந்த அளவுக்கு ரப்பர் கொண்டு வந்தால் சரி,, இல்லையேல் உங்கள் இடக்கையை வெட்டிவிடுவோம் என அச்சுறுத்தப்பட்டனர்.பின்னர் குழந்தைகளையும் அதில் ஈடுபடுத்தினர்.10 மில்லியன் அளவுக்கு பெருந்தொகையான மக்கள் வெறும் 40 ஆண்டுக்ளில் காங்கோவில் இறந்தனர்.காங்கோ உலகின் மிக அதிகமான தாதுவளம் கொண்ட நாடு பூமியில்.எல்லா அரிய உலோகங்கள், மின்னணுத் தொழிற்சாலைகள், மேக்புக், திறன்பேசி, ஐபோன் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் அரிய தாதுக்கள் காங்கோவிலிருந்தே பெருமளவு பெறப்படுகின்றன. அதனால் பேரழிவுக்குட்பட்டது.ஏனென்றால் இன்று வரை அவைக் கொள்ளையடிக்கப்பட்டுவருகின்றன.அதன் முழு விவரங்களுக்கு நான் போகவில்லை. அடிமைகளின் எண்ணிக்கை மட்டும் ஆப்பிரிக்காவுக்கு என்ன நேர்ந்தது என்பதனைத்தையும் கூறிவிடாது.இவை அனைத்தும் ஆப்பிரிக்காவின் துணை சகாரா பகுதிகளில் நடந்தவை.வட ஆப்பிரிக்காவில் இதே போன்று நடக்கவில்லை.சோமாலியா, எத்தியோப்பியாவை எடுத்துக் கொண்டாலும் அவைப் பெருமளவில் வெவ்வேறு வகைகளில் அழிக்கப்பட்டுள்ளன. ஆப்பிரிக்காவை புரிந்துகொள்ளும் போது மிகவும் முக்கியமானது என்னவென்றால் ஆப்பிரிக்கா ஒரு ஏழை நாடு, ஏழைமக்களைக் கொண்ட நாடுகள் எனக் கூறும்போது அவர்களது வறுமைக்கு மிகப்பெரும் காரணம் இன்று வரைத் தொடரும் காலனியாதிக்கமே தவிர ஆப்பிரிக்க மக்கள் காரணமல்ல . அவர்கள் உலகத்தின் தாதுவளமிக்க பகுதியில் இருக்கிறார்கள். நான் இப்பொழுது விரிந்தக்கண்ணோட்டத்தைத் தரும் சிறிய சிறிய விசயங்களைக் கூறவுள்ளேன்.பல வருடங்களைத் தாண்டு 1789ல் நிகழ்ந்த பிரெஞ்சு புரட்சிக்கு வருவோம். அந்தக் காலகட்டத்திலே தேசியம் பல்வேறு வடிவங்களில் முன்வந்தது.ஏனெனில் பிரெஞ்சுப் புரட்சி முதலாளிகளுக்கும் மேற்குடிகளுக்கும் அதிகாரம் அளித்தது.தேசம் என்பதன் நவீனப் பொருள் கொண்ட வெஸ்ட்பாலியன் தேசமும் உருவானது.ஃபிரெஞ்சு புரட்சியின் போதே ஃபிரான்ஸ் குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அங்கே முதன்முதலாக, பிரெஞ்சு

நாட்டின் எல்லைக்குள் வாழும் அனைவருமே ஃபிரெஞ்சு நாட்டின் குடிமக்களாக அழைக்கப்பட்டனர்.அங்கே சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பிரகடனம் செய்யப்பட்டது.இப்பொழுது அந்த காலகட்டத்தில் ஃபிரெஞ்சு காலனியாக இருந்த ஹைட்டியில் நடந்ததை காண்பது சுவாரசியமாயிருக்கும்.ஃபிரெஞ்சு காலனியின் மிக செலவமிக்க பகுதி ஹைட்டி. ஏனேன்றால் அங்கு சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. வாசனை பொருட்களுக்கு அடுத்து அதிக முக்கியமானதாக சர்க்கரை கருதப்பட்டது.அதைக் கருப்புத் தங்கமாக அழைத்தார்கள்.ஏனெனில் ஐரோப்பாவில் அதை விளைவிக்க முடியாது வேறு பகுதிகளிலிருந்து வாங்குவதும் விலையுயர்ந்ததாய் இருந்தது.அதனால் மேற்கிந்தியத் தீவுகளில் கவனம் செலுத்தி அவர்களுடன் சர்க்கரைக்காக சண்டையிட்டு பல இனப் படுகொலைகள் செய்தனர்.அதில் பலர் இறந்தனர்.நோயாலும் இறப்புகள் நேர்ந்தன.ஆனால் அங்கே வேலை செய்ய ஆட்கள் இல்லை.அதனால் ஆப்பிரிக்க அடிமைகளை கொண்டுவந்து கரும்பு உற்பத்தி செய்தனர். ஹைட்டியில் அடிமைகள் கிளர்ச்சி செய்தனர்.சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவத்திற்காக பிரெஞ்சு புரட்சி உருவானது.எங்களுக்கும் சமத்துவம் வேண்டும், எங்களுக்கும் சுதந்திரம் வேண்டும்.என்று அவர்கள் பிரெஞ்சு காலனியாதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். தொசன்ட் லொவர்சர் தலைமையில் அவர்கள் பிரெஞ்சு படைகளையும் பிரிட்டிஷ் படைகளையும் தோற்கடித்தனர். தொசண்ட் லொவர்சரை பிரெஞ்சு அரசு சிறையில் அடைத்து சித்திரவதை செய்தது.அவர் சிறையிலே இறந்துவிட்டார்.தொசண்டின் படையை சேர்ந்த இருவரால் கிளர்ச்சி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. நெப்போலியன் 30000-40000 படைகளை கிளிர்ச்சியாளர்களுக்கு எதிராக அனுப்பினார்.நெப்போலியனது படைகள் தோற்கடிக்கப்பட்டன. இதில் முக்கியமானது என்னவென்றால் ஃபிரெஞ்சு புரட்சி பிரெஞ்சு குடியரசை உருவாக்கியது. ஆனால் அது சுதந்திரத்தையும்,சகோதரத்துவத்தையும் ஃபிரான்சு நாட்டின் எல்லைக்குள் இருக்கும் குடிமக்களுக்கு மட்டுமே தந்ததே ஒழிய ஃபிரெஞ்சு காலனிகளுக்கு அல்ல.அடிமை முறை இருக்கலாம் அது பிரச்சினை அல்ல.அடிமை முறை என்பது ஒரு பொருளாதார பிரச்சினை, அரசியல் பிரச்சினையில்லை.அடிமைகள் விடுதலை பெறமுடியாது என்று கருதினர். லொவர்சருடன் உடன்படிக்கை மேற்கொண்ட ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே அடிமைமுறையை நிறுத்தினர் நெப்போலியனது படைகள் ஹைட்டிக்கு அனுப்பப்பட்ட போது ஹைட்டியில் அடிமைமுறை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.அங்கு குடியாட்சியின் வீழ்ச்சிக்கு பின் நெப்போலியன் மன்னராக அறிவிக்கப்பட்ட பின்னரே நெப்போலியனால் ஹைட்டிக்கு புரட்சியை ஒடுக்கப் படைகள் அனுப்பப்பட்டது.அதற்காக வட அமெரிக்காவில்

அவர்களுக்கிருந்த லூசியானாவிலிருந்தும் படைகளைத் திரட்டினர். பிரிட்டிஷுடன் முறித்துக் கொண்டு தங்களது சுதந்திரத்தை பிரகடனம் செய்த 30 காலனிகளின் அளவிற்கு இருந்தது (அமெரிக்கப் புரட்சி) லூசியானா. அங்கிருந்து பெறப்பட்டப் படைகளும் ஹைட்டியால் தோற்கடிக்கப்பட்டது.இதற்கு பின் நடந்தவை முக்கியமானவை.ஒன்று ஃபிரான்ஸ் லூசியானாவை, 30 பிரிட்டிஷ் காலனிகளிடம் விற்றது. லூசியானாவுடன் இணைந்ததால் ஐக்கிய அமெரிக்காவின் பரப்பளவு இருமடங்கானது.இந்த பொருளாதார விளைவால் ஐக்கிய அமெரிக்கா மேலும் வலிமை பெற்றது.எல்லா காலனிய சக்திகளும் இணைந்து ஹைட்டியை அச்சுறுத்தின.ஹைட்டியின் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்கிறோம்.ஆனால் விடுவித்த அடிமைகளுக்காக நீங்கள் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என அச்சுறுத்தப்பட்டது.அதையடுத்து ஹைட்டி விடுதலை பெற்ற அடிமைகளுக்காக 122ஆண்டுகளாக நஷ்ட ஈடு கட்டி வந்துள்ளது.அதைக் கணக்கிட்டால் தற்போதைய மதிப்பில் தோராயமாக 21 பில்லியன் டாலர்.ஹைட்டி தற்போதுள்ள ஐக்கிய அமெரிக்காவைவிட 354 மடங்கு சிறியது.ஹைட்டி உலகின் மிக வறுமையான நாடாக உள்ளது எப்படி என்றால் அவர்கள் மிகப் பணக்கார நாடான ஃபிரான்ஸுக்கு அடிமைகளை விடுவித்ததற்காக நஷ்ட ஈடு கட்டியே வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்த வரலாற்றை மறக்கவேண்டாம்.இதன் இன்னொரு பகுதி முக்கியமானது.அதனால் தான் வெனிசுலா ஹைட்டிக்கு ஆதரவு அளித்தது, ஹைட்டிக்கு இலவசமாக எண்ணெய் வழங்கியது.எதனால் அவ்வாறு செய்கிறது என்றால் அதற்கு ஓர் வரலாறு உள்ளது.அமெரிக்காவின் விடுதலையாளராக அறியப்பட்ட சிமன் பொலிவர் போரிடும் போது அவரிடம் போராயுதங்கள் இல்லை. ஹைட்டியர்கள் போர்க்கருவிகளையும் ஆயுதப்பயிற்சியும் அளித்து, ஸ்பானிய மற்றும் பிரெஞ்சு படைகளுடன் போரிட்டு அமெரிக்கா விடுதலை பெற உதவினார்கள்.அதனால் தான் வெனிசூலாவின் சாவேஸ், இதை நாங்கள் ஹைட்டிக்கு இலவசமாக அளிப்பதாகக் கருதவேண்டாம் பொலிவருக்கு ஹைட்டி தென்அமெரிக்கப் புரட்சியின் போது செய்ததை நாங்கள் திரும்ப செலுத்துகிறோம் என்று கூறினார்.இந்த வரலாறுகள் அறியப்படாமல் இருந்தது.உலகின் பெரும்பகுதியின் இடதுசாரிகளுக்கும் இவை கிடைக்கப் பெறாமல் இருந்தது.நாம் மேற்குலகம் கற்பிக்கும் வரலாற்றையே உண்மையெனக் கருதுகிறோம் ஆனால் அவை கறை படிந்துள்ளன. இது போன்ற வரலாறுகளையே மீண்டும் காட்ட விரும்புகிறேன்

**.தொழில்நுட்பமும்-தொழிற்புரட்சியும்:**

உலகின் தொடர்ச்சியான வரலாற்றை நான் அளிக்கவில்லை.இதைப்பற்றி மேலும் படிக்கவும்,

அறியவும் சில உதாரணங்களையே தருகிறேன்.இதன் இன்னொரு பகுதியாக நான் கூறப்போவது தொழிற் புரட்சியோடு இணைந்த காலப்பகுதியில் தென் ஐக்கிய அமெரிக்காவில் செய்யப்பட்ட பருத்தி பயிரிடுதல் குறித்தது. தென் ஐக்கிய அமெரிக்கா தொழிற்புரட்சிக்குப் பிறகு பெருமளவு பருத்தி வழங்கும் பகுதியாய் மாறியது.எதனால் பருத்திக்கான தேவை அபரிமிதமாக அதிகரித்தது எனப் பார்த்தோமானால், லங்காசியர், மேன்செஸ்டரில் உள்ள ஆலைகளில் உள்ள நூற்பு இயந்திரங்கள் முன்னைக் காட்டிலும் அதி வேகமாக செயல்பட்டதால், அந்தளவு பருத்தியை எங்கிருந்து பெறுவது என்பது இடர்பாடாக இருந்தது.அதனால் ஐக்கிய அமெரிக்காவின் தென் பகுதியில் பருத்தி பயிரிடப்பட்டது.அங்கே வேளாண்மை விரிவாக்கம் செய்யப்பட்டது.அதன் அடுத்த 30-50 வருடங்களுக்கு பருத்திப் பயிரிடும் அடிமைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை.இதில் முக்கியமானது என்னவென்றால் அந்தக் காலகட்டத்தில் ஐக்கிய அமெரிக்காவிடம் பெரும் மூலதனமாக அடிமைகளே இருந்தனர்.அவர்களை வங்கி பரிவர்த்தனை செய்யமுடியும்.அடிமைகளை பிணையாக வைத்து கடன் பெறுவதில் அவர்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லை.ஐக்கிய அமெரிக்காவின் மொத்த வங்கித் தொழில்துறை அடிமைமுறையிலிருந்து வளர்ந்தவை. 19ஆம் நூற்றாண்டில் அடிமைகளே ஐக்கிய அமெரிக்காவின் பெரும் மூலதனமாக இருந்துள்ளனர். எட்வர்ட் பேப்டிஸ்டு எழுதிய ஒரு நூலில் இங்கிலாந்தின் தொழிற்புரட்சிக்கான ஆற்றலை இயந்திரங்களும்,உழைப்பும் வழங்கியதாகவும், எது தொழிற்சாலைகளுக்கு பருத்தி வழங்கியது எனப் பார்த்தோமானால் அடிமைகளை சாட்டையால் அடிப்பதே பருத்திவேளாண்மையில் ஏற்பட்ட ஒரே " தொழில்நுட்ப முன்னேற்றம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.எட்வர்ட் பேப்டிஸ்ட் எழுத்தின் படி கசையடி இயந்திரமே தொழிற் புரட்சிக்கு ஆற்றல் அளித்திருக்கிறது.ஒரே தொழில்நுட்ப முன்னேற்றம் நன்றாக கசையால் அடி, மேலும் நன்றாக கசையால்அடி.என்பது தான்.ஒவ்வொரு அடிமையின் விளைபொருளும் தொழிற் புரட்சி யின் வேகத்திற்கு இணையாக்கப்பட்டது.தொழிற் புரட்சியால் தொழிலாளரின் உற்பத்தித்திறன் 10-.30 மடங்கு அதிகரித்தது.அதற்கு இணையாக அடிமைகளின் உற்பத்தித்திறன் அதிக கசையடி மூலம் பெறப்பட்டது.ஒரு அடிமையின் வாழ்நாள் மதிப்பு என்ன எனக் கணக்கிடப்பட்டது.அடிமை 20-28 வயதில் இருக்கும் போது எவ்வளவு சாப்பிடுகிறார்,எவ்வளவு உற்பத்தி செய்கிறார், அவரை 28 வயதுக்கு மேல் வைத்திருக்கும் போது முதலாளிக்கு வரவு குறைகிறது.அவரது உற்பத்தி குறைகிறது ஆனால் அடிமைக்கு உணவு தரவேண்டியுள்ளது.அடிமைக்காக செய்த முதலீட்டை அடிமைக்கு 20-24 வயதுள்ள போது பெறமுடிந்தால்,அதற்கு பின் அடிமை இறந்தால் அது ஒரு பெரிய விசயம் இல்லை. மீட்ட

முதலிலிருந்து வேறு அடிமையை வாங்கி மீண்டும் ஒரு சுழற்சியை மேற்கொள்ளலாம்.இது முதலாளித்துவக் கணக்கீடு,இந்த அடிமைமுறை ரோமில் இருப்பது போன்ற அடிமைமுறை இல்லை.இந்த அடிமை முறையில் அடிமைகள் உண்மையில் இயந்திரத்தைப் போலவே நடத்தப் படுகின்றனர்.உயிருள்ள .மனிதரைப் போல் நடத்தாமல் இந்த இயந்திரத்தை பதிலீடு செய்வதற்கு முன் எவ்வளவு நாள் வைத்திருக்க வேண்டும் என்று முதலாளித்துவக் கணக்கீடு செய்யும் கொடூரமான அமைப்புமுறை இருந்துள்ளது.ஆனால் அடிமைமுறை தான் தொழில் புரட்சிக்கு ஆற்றல் வழங்கியது என்பதை மறக்கவேண்டாம்.அது இரண்டு வகையில் ஆற்றலூட்டியது, ஒன்று கண்டங்கள் தாண்டிய நிதி தொழிற் புரட்சியுடன் இணைந்தது பிரிட்டனும்,பிரான்ஸும் பங்கேற்ற அடிமைவாணிகத்தின் மூலமே நடைபெற்றது.ஸ்பானியர்கள் அமெரிக்காவில் அடித்தத் தங்கக்கொள்ளை, முதன்மை அடிமையாளராக போர்த்துகீசியர் செய்த அடிமை வணிகம், இவை அனைத்தும் இணைந்தே தொழிற்புரட்சியை உருவாக்கியது.அதனால் தான் மார்க்ஸ் மூலதனத்தைப் பற்றிக் கூறும் போது அதன் ஒவ்வொரு துளையிலிருந்தும் வியர்வையும், ரத்தமும் சிந்திவந்ததாகக் கூறுகிறார்., மூலதனத்திற்கு அடிப்படையாய் அமைந்த திருட்டு,கொள்ளையையும், அடிமைமுறையையுமே இதில் குறிப்பிடுகிறார்.ஒரு தொழிற் புரட்சிக்கு ஆற்றல் தரத் போதுமான மூலதனம் இவைகளிலிருந்தே பெறப்பட்டது. (தொடரும்)

பதிவு எண் :R.Dis. No. 1964/2014